உ

சிவமயம்

தேவி துணை

தேவி தோத்திர மஞ்சரி

I

ஸ்ரீ மந்த்ர மாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம்,
கௌரீதசகம், ஸ்ரீராஜராஜேஸ்வரி அஷ்டகம்
என்பவற்றின் வடமொழி மூலமும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1939
MADRAS

யாழ்ப்பாணம்
தி. சதாசிவ ஐயர்
(*District Inspector of Schools, Kandy, Ceylon*)
இயற்றிய
தமிழ் உரையும், தமிழ்மொழிபெயர்ப்புச்
செய்யுளும், சேரப்பெற்றது.

சென்னை,
பி. ஜீ. பால் அண்டு கம்பெனியாரால்,
பிரசுரிக்கப்பட்டது.

விலை அணு 6.

PUBLISHED, OCTOBER, 1938.

Q25:417
N38

PRINTED BY R. NARAYANASWAMI IYER
AT THE MADRAS LAW JOURNAL PRESS,
MYLAPORE, MADRAS.

224737

Copyright Reserved

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1939
MADRAS

பதிப்புரை

இப் புத்தகத்தில் அடங்கிய ஸ்தோத்ரங்கள் ஸாதாரணமாய் ஆஸ்திகர்களாகிய உத்தமர் பலரும் நாள்தோறும் பாராயணமாய்ச் சொல்லி அம்பாளை ஸ்துதித்து வருவனவாம். இவை இதுகாறும் ஸம்ஸ்கிருத பாஷை தெரிந்தவர்களுக்கு மாத்திரம் ப்ரயோஜனப்படுவனவாய் இருந்தன. இப்போது ஸம்ஸ்கிருதபாஷை தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் ஆகிய இருதிறத்தினரும் இந்த ஸ்தோத்ரங்களைப் படிக்கவும், படித்து அவற்றின் பொருளை நன்ருய் அறிந்துகொள்ளவுந் தக்கவிதமாய் ஸ்ரீ. தி. சதாசிவ ஐயரால் இப்புத்தகம் ஆக்கப்பட்டிருக்கிறது. அம்பாள் விஷயத்தில் விசேஷபக்தி யுடையவர்களாயும், ஸம்ஸ்கிருதந் தெரியாமையால் மேன்மைபொருந்திய இத்தோத்திரங்களைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள முடியாமல் இருந்த தனித் தமிழ்மாத்திரந் தெரிந்த அன்பர்களும் இவற்றைப் படித்துப் பாராயணஞ் செய்தற்கேற்ற வண்ணம் தமிழ்ச் செய்யுள் நடையாகவும் இவை ஆக்கப்பட்டுள்ளன.

தேவியின் அருளைப் பெறவிரும்பும் அன்பர்கள் எல்லாரும் இத்தோத்திரங்களை நியமமாகப் பாராயணஞ்செய்து ஜகன் மாதாவாகிய அம்பிகையின் பூர்ண அனுக்கிரகத்திற்குப் பாத்திரர்களாகி இஷ்டசித்தி எய்தி இன்புறும்படி அன்பர்களெல்லோரையும் வேண்டிக்கொள்ளுகின்ருேம்.

சென்னை,
1—10—1938

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

பொருளடக்கம்

பக்கம்

1. முன்னுரை 1
2. ஸ்ரீமந்திர மாதிருகா புஷ்பமாலா ஸ்தவம், தமிழ்ச்செய்யுள் 14
3. கௌரீதசகம், தமிழ்ச்செய்யுள் 17
4. ஸ்ரீராஜராஜேஶ்வரி அஷ்டகம், தமிழ்ச்செய்யுள் 20
5. ஸ்ரீமந்த்ர மாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம், மூலமும் உரையும் 23
6. கௌரீ தசகம், மூலமும் உரையும் 41
7. ஸ்ரீராஜராஜேஶ்வரி அஷ்டகம் மூலமும் உரையும் 58
8. அரும்பத அகராதி 64

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி.	பிழை.	திருத்தம்.
37	6	ஹாடீ	ஹாரதீ
47 (த. செ)	3	தனுவடையான்	தனுவுடையாள்
49 (த. செ)	2	ணியினிரை	மணியினிரை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1939
MADRAS

முன்னுரை

தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

திருவே யென்செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற் சோதிமிக்க
உருவேயென் னுறவேயென் னூனே யூனின்
உள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோ யடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே.

திருச்சிற்றம்பலம்.

1. நாற்பயன்.

உலகத்து மக்களாய்ப் பிறந்த அனைவரும் தங்கள் வாழ்க்கையில் அடைய விரும்பி முயலும் பயன்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இந் நான்கனுள்ளும் அடங்குவனவாம். இவற்றுள் ஒன்றையே அடைய முயல்பவரும் ஒன்றன்மேல் பலவற்றை அடைய முயல்வாரும் எனப் பலதிறப்படுவர் மக்கள் என்க. எனினும் இவர் எல்லாராலும் ஒத்த பான்மையாக விரும்பப்படுவதும் முயன்று தேடப்படுவதும் ஆகிய ஒருபயன் இன்பமே என்பதில் ஐயமின்று. இவ்வாறு எல்லாரும் அடைய விரும்பும் இன்பமும் வெவ்வேறு

மக்களிடை வெவ்வேறு கருத்தளவாக இருக்கும் என்பதும், அதனை அடைய அவர் கைக்கொள்ளும் வழியும் வெவ்வேருக இருக்கும் என்பதும் அநுபவத்திற் காணப்படுவனவாம். ஆயினும், சுகபோகாநுபவ வாழ்க்கையாகிய இம்மை இன்பத்தையே தேடுநரும், நித்தியாநந்தவாழ்வாகிய மறுமை இன்பத்தையே தேடுநரும், இம்மையின்பத்தோடு மறுமை இன்பத்தையும் தேடுநரும் என மக்களை முத்திறப்படுத்தலாம். இவர் ஒவ்வொருவரும் விரும்பிய இன்பப்பயனை அடைதற்குப் பொருள் இன்றியமையாத துணைக்காரணமாம். அதனுற் பொருள் தேடுதலை எல்லாரும் விரும்புவர். இப்பொருள் இருமையின்பங்களையும் பயப்பதென்பது.

அது,

"முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியும்"

எனவும்,

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு" (குறள், 247)

எனவும்,

"அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு" (குறள், 753)

எனவும் வருவனவற்ருலும் அறியப்படும்.

இவ்விதமாய் இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணை செய்வதாய பொருளைத் தேடுங்கால் அறத்தின் வழிநின்றே தேடுதல் வேண்டும். அற(தரும)வழியை விட்டு, வஞ்சம் கொடுமை அநீதி முதலிய அதன்ம வழியில் பொருள் தேடுவோர் ஈற்றில் அப்பொருளை இழந்தும் அப்பொருள்வாயிலாக அவர் அடையவிரும்பிய இன்பத்தையும் இழந்தும் துன்புறுதலை உலகாநுபவத்திற் காண்கின்றேம்; ஆகலின், இவ்வுலக இன்பம் ஒன்றையே அடையவிரும்புவோரும் தருமமல்லாத வழியிற் பொருள்தேடுதலை முற்ற ஒழித்தல் வேண்டும் என்பது வெளிப்

படையாம். தருமவழியாவது தம் வாழ்க்கைமுறையில் அன்பையும் அருளையுங் கடைப்பிடியாகக்கொண்டு செயல் செய்யும் வழி என்பது. உறவு சிநேகம் முதலிய தொடர்புபற்றி ஒருவரிடத்துக்கொள்ளும் பற்றுகிய அன்பும், அவ்விதத் தொடர்பின்றியும் வருத்தமுறும் உயிர்களிடத்துப் பொதுவாகக் கொள்ளும் பற்றுகிய அருளும் அறத்தின்பாற்படுமென்றறிக.

இதனல், பொருளும் இன்பமுமாய இருபயனையுந் தீதின்றிப் பெறுதற்கு அறம் இன்றியமையாத துணையாகற்பாலது என்பது மறுக்கொணு உண்மையாம். அறம் பொருள் இன்பம் என அறத்தை முதற்கண் வைத்துச் சொல்லும் முறைமையும் இச்சிறப்பு நோக்கியே யென்பது.

இதனை,

"சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல". (புற. செய்யுள். 31)

(இ - ள். சிறப்புடை முறையால் பொருளும் இன்பமும் அறத்தின் பின்னே தோற்றுங் காட்சி போல.)

என்பதனுலுமறியலாம். நாம் நமது வாழ்க்கையில் அறத்தை அடிப்படையாக்கொண்டு ஒழுகிப், பொருளையும் இன்பத்தையுந் தேடி இவை வாயிலாக வீடுபேற்றை அடைய முயலுதலே இப்பிறவியினுலாம் பயனென அறிதல் வேண்டும். மேலும், இல்வாழ்க்கையென்னுந்தேரைச் செலுத்திச் செல்லும் போது, அதிற்பூட்டியுள்ள பொருள், இன்பம் என்னும் இருயானைகளும் மதங்கொண்டு அடங்காது நம்மையுந் தேரையும் நல்வழியினின்று புறம்பே காட்டுள் இழுத்துச்சென்று பாவப்படுகுழிகளில் விழுத்தி அதோகதி அடையச்செய்யாதிருக்கும்படி, அறம், வீடு என்னும் இரண்டும் இருமருங்கிலும் அரணுன இரு சுவர்களாக அமைய, அவற்றைத் துணையாகக்கொண்டு இடைப்பட்ட செந்நெறி பற்றி ஒழுகுதல் நமது கடனுகும் என்னுங் குறிப்பு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் முறை

வைப்பினால் அறியக்கிடப்பது எனக்கொள்ளுதலும் பொருத்த முடைத்தென்பது.

2. தெய்வங் கொள்கை.

1. அம்மை பயக்கும் அமிர்துகண்டாய் அந்தேன் தெளிகண்டாய்
ஆக்கஞ்செய்திட்டு
இம்மை பயக்கும் இறைவன்கண்டாய் என்னெஞ்சே யுன்னில்
இனியான் கண்டாய்
மெய்ம்மை யேஞான விளக்குக்கண்டாய் வெண்காடன்
கண்டாய் வினைகள் போக
மம்மர் அறுக்க மருந்துகண்டாய் மறைக்காட்டுறையு மணாளன்
றனே.
(திருநா - தேவா)

2. சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசும்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே"
(அபி - அந். 28)

நமது வாழ்க்கையை அறவழியில் நடத்தி வாழ்க்கைப் பயனை யடைந்து உய்தி பெறுவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது மெய்யறிவு என்பது. அஃதாவது நாம் கல்வி கேள்விகளாலான அறிவோடு உண்மையறிவுடையவராதல் வேண்டுமென்பதாம். மக்களாகிய நம் அறிவு சிற்றறிவுமாத் திரையாகலின், முற்றறிவுடைய முழுமுதலாகிய கடவுளது அருளைக்குறையிரந்து வேண்டிப்பெற்றால் அல்லது நாம் உண்மையறிவும் உறுதியும் பெறுதல் அரிதாகும். நாம் மனம் வாக்குக் காயம் என்னுந் திரிகரணங்களாலும் செய்யும் நல்வினை தீவினைகளை யெல்லாம் அறிந்து அவற்றிற்கேற்க இன்பத்

துன்பங்களைத் தந்து எம்மை ஆளும் ஒரு முழுமுதற் கடவுள் உண்டென்பதை நாம் உறுதியாய் நம்புதல் வேண்டும். அவ் விறைவனிடத்து நீங்காத அன்பு உடையவர்களாய் அவனை நினைத்து வழிபட்டு அவனருளைப்பெற முயலல் வேண்டும்.

இறைவன் உயிர்களிடத்து நீங்காத பேரன்புடையவன். உயிர்களுக்குச் சுகம் செய்தலே இறைவன் தொழிலாகும். அதனால் இறைவன் சிவன் எனவும் சங்கரன் எனவும் பெயர் பெறுவன்.

இறைவன் உயிர்களுக்கு அம்மையும் அப்பனும் ஆவன். அதனால் இறைவனைச் சத்தியுஞ் சிவமுமாகக் காண்கின்றோம். சிவன் ஆன்மாக்களிடத்துக் கொண்ட கைம்மாறற்ற பெருங் கருணையாகிய அருளே சத்தி எனப்படும். அதனால் சிவத்துக் கும் சத்திக்கும் பேதமின்றாம். சிவரூபமாக வழிபடுவது போல இறைவனைச் சத்திரூபமாக வழிபடுதலும் அவனதருளைப் பெறுதற்கேற்ற சாதனமேயாம். எனினும், தந்தையிலும் தாயில் சேய்கள் கூடின அன்பும் நம்பிக்கையும் உடையராதல் இயல்பாகலின், இறைவனைத் தாயாக வழிபடுதல் மக்களுக்கு அன்பினில் இன்பம் பயக்கும் இயற்கைவழியா மென்பதும் நோக்கற்பாலது. அதனால் நாமெல்லோரும் உலகம் நடத்தற்குக் காரணமாகிய பராசத்தியை வழிபடுகின்றோம். இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய வீரம் செல்வம் அறிவு எல்லா வற்றையுங் கொடுப்பவளும் மறு உலகவாழ்விற்காகிய சாதனங் களை யாக்குவிப்பவளும் அச் சிற்சத்தியே யாவள்.

கருணா ரூபிணியாகிய ஜகன்மாதாவானவள் தன்னை வழிபடு கின்ற அன்பர்களுக்கெல்லாம் சமஸ்தமான விருப்பங்(காமங்) களையும் கொடுத்துப் பரிபூர்ணமான கிருபை செய்பவளாதலின் அவள் காமாக்ஷி எனப்படுவள். அம்பிகையானவள் அடியார் கள் விரும்பி வேண்டுவதிலும் பார்க்க அதிகமான பலன்களைக் கொடுப்பவள் என அவளது அருள்திறத்தையும் வள்ளன்மை யையும் பாராட்டி எடுத்துக் கூறும்,

त्वदन्यः पाणिभ्यामभयवरदो दैवतगणः
त्वमेका नैवासि प्रकटितवराभीत्यभिनया ।
भयात्त्रातुं दातुं फलमपि च वाञ्छासमधिकं
शरण्ये लोकानां तव हि चरणावेव निपुणौ ॥ (ஸௌந்த. ல. 4)

𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑌃 𑌪𑌾𑌣𑌿𑌭𑍍𑌯𑌾𑌮𑌭𑌯𑌵𑌰𑌦𑍋 𑌦𑍈𑌵𑌤𑌗𑌣𑌃
𑌤𑍍𑌵𑌮𑍇𑌕𑌾 𑌨𑍈𑌵𑌾𑌸𑌿 𑌪𑍍𑌰𑌕𑌟𑌿𑌤𑌵𑌰𑌾𑌭𑍀𑌤𑍍𑌯𑌭𑌿𑌨𑌯𑌾 ।
𑌭𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍁𑌂 𑌦𑌾𑌤𑍁𑌂 𑌫𑌲𑌮𑌪𑌿 𑌚 𑌵𑌾𑌞𑍍𑌛𑌾𑌸𑌮𑌧𑌿𑌕𑌂
𑌶𑌰𑌣𑍍𑌯𑍇 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌤𑌵 𑌹𑌿 𑌚𑌰𑌣𑌾𑌵𑍇𑌵 𑌨𑌿𑌪𑍁𑌣𑍌 ॥

என்ற ஸ்ரீமத். ஆசாரியசுவாமிகளது அருள்வாக்கும் ஈண்டு நோக்கற்பாலது.

ஒவ்வொருவரிடத்திலுங் கலந்து நின்று அவரவரை இயக்கி அவர் தொழிலுக்குக் காரணமாய் நிற்பவள் இச்சிவசத்தியே என்பதை,

“ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே
அடக்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே
ஓட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே
உருகுவித்தா லாரொருவ ருருகா தாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே
பணிவித்தா லாரொருவர் பணியா தாரே
காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாக் காட்டாக் காலே.”

(திருநா - தேவா.)

எனவும்,

“சீரணி சிருக்கு மணிவடந்தண்டு
திகிரிசூ லப்படை யிலைவேல்
போரணிபாச மங்குசங் கழைவில்
பூங்கணை வேறுவே றணியா
ஆரணன் மாய னரனிப முகத்தன்
அநங்கனென் றிவர்தொழிற் கெல்லாங்

காரண மாதல் தெளித்தருள் தொழிக்குங்
கன்னியை யுன்னியேத் தெடுப்பாம்'' (தணி. புரா.)

எனவும் வரும் பெரியோர் வாக்காலும் அறியலாம். இம்மையில் யாம் விரும்பிய போகபோக்கியங்களை யுதவி இருமைக்கும் உறுதுணையாயிருப்பது சிவனது அருட்சத்தியே என்பதும், அவன் அருளின்றி அவனை அறிதல் முடியாது என்பதும்,

"பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணு
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலு மாமே.'' (சுந்தர. தேவா.)

எனவும்,

"தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ் சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும் ஏத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதற் கியாது மையுற வில்லையே.''
(சுந்தர. தேவா.)

எனவும்,

"ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்று யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்று னிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே.
(திருநா. தே.)

எனவும்,

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி மயானத்தான்
வார்சடையான் என்னின் அல்லான்

ஒப்புடைய னல்லன் ஒருவன் அல்லன் ஓரூரன்
அல்லன்ஓர் உவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணுகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன் இவனிறைவன்
என்றெழுதிக் காட்டொ ணாதே.''
(திருநா. தேவா.)

எனவும் வரும் தமிழ் மறைகளாலும் அறியப்படும்.

---

3. தெய்வ வழிபாடு.

பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தற்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்விதியினு லிடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னரே.
(திருநா. தேவா.)

'அவனருளாலே அவன்றாள் வணங்கி' என்ற மாணிக்க வாசகத்தின்படி, சிவனை வழிபடுதலும் அவனருளைப் பெறுதலும் எவ்வாறும் எனின், சிவத்தை மனத்திலிருத்தி இடைவிடாது தியானித்தலால் ஆமென்பது. தியானமாவது மனத்தை வேறு வழியிலே செல்லவிடாது கடவுளிலே நிறுத்துதல் என்பதாம். இஃது எளிதிற் சித்திப்பதன்று. உலகப்பற்றிற் படிந்த உள்ளம் ஓயாது உலக விஷயங்களிலேயே செல்லும். ஓரிடத்தில் நில்லாது. அரூபியாகிய ஒரு பொருளை நினைத்தலுந் தியானித்தலும் முதலிற் சாத்தியம் ஆகாது. உருவுங் குணமும் உள்ள பொருளாகப் பாவித்து அப்பொருளிடத்திற் பத்தி பண்ணுதலே ஏற்றசாதனமாம். உயிர்களிடத்துக் கொண்ட பேரருளே 'தன்னை நேரிலாப் பரம்பொருள் தனி உருக் கொண்ட' தன் காரணமாம். அப்பரம்பொருளினது அருட் குணங்களையுஞ் செயல்களையும் நினைத்தலினாலும், புகழ்களைப்

படித்தலினாலும் மனம் படிப்படியாய்ப் புறஞ்செல்லாது வசப் படுவதாகும். இறைவனது அருளுருவை மஞ்சனம், மலர், தூபம், தீபம், நிவேதனம் என்பன கொண்டு பூசித்தலினால் மனம் தூய்மையுறும். பலமுறையும் பயின்று பயின்றுவரவே சித்தத்தை ஒருவழிப்படுத்தித் தியானத்தில் நிறுத்துதல் சாத்தியமாகும்.

அதனால், மனத்தைப் புலன்வழியிற் செல்லவிடாது கடவுள்வழியிற் செலுத்துதற்கண் முதற்படியான சாதனமாய் இருப்பது கடவுள்வணக்கமாகிய தோத்திரங்களைப் படிப்பது என்பது. அதுவும் அவற்றின் பொருளை அறிந்து படித்தாலல்லது பெரும்பயனைத்தராது; ஏனெனில் அறியாதது ஒன்றில் ஆர்வங்கொண்டு மனம்படியாது ஆகலினென்க. தேவ தோத்திரங்களைப் படித்து அன்பு செய்தற்கும் ஒருவர்க்குப் பூர்வபுண்ணியம் வேண்டுமென்பர் பெரியோர்.

அது,

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

(திருஞான. தேவா.)

என்பதனாலும் அறியப்படும். மேற் கூறிப்போந்த ஏதுக்களால் கடவுள் வழிபாட்டிற் கருத்துடைய அன்பர்கள் ஓதித் திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் பெற்று இன்புற்றுப் பயனடையுமாறு, அநுபூதிச் செல்வர்களாகிய ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் சிவனது அருட்சத்தியாகிய தேவிபேரில் வடமொழியில் அருளிச்செய்த சில தோத்திரங்களும் அவற்றது தமிழ் மொழி பெயர்ப்புக்களும் இதிற் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளன. உலகமாதாவாகிய பராசத்தி கிருபை செய்வாளாக.

4. தோத்திர வரலாறு.

(1) மந்த்ர மாத்ருகா புஷ்ப மாலா ஸ்தவம் :—

இது ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகளால் அருளிச் செய்யப்பட்டது. மந்திரத்துள்ள அக்ஷரங்களாகிய மலர்களை வரிசையாய் வைத்துத் தொடுத்த மாலையாகிய துதி என்பது இதன் பொருள். மந்திரம் என்றது பராசத்திக்குரிய சர்வோத்கிருஷ்டமான ஸ்ரீவித்யா மகாமந்திரத்தை. அதன்கணுள்ள அக்கரங்களைக் கிரமப்படி முதற்கண்வைத்துச் செய்யப்பெற்ற செய்யுள் வரிசையைக் கொண்ட இத்தோத்திரம் தேவிமந்திர ரூபமானது என்றறிக. அதனால் இத்தோத்திரம் மிக்க மகத்துவம் உடையதென்பதும் இதனை ஓதுவோர் தேவி மந்திரத்தைச் செபம் செய்பவராவர் என்பதும் உணர்ந்து கொள்க. மாதிருகை என்பது அக்ஷரம் (எழுத்து); அஃது அகரமுதலிய 51 எழுத்தின் கூட்டமாகிய அரிவரிக்கும் பெயராகும். சப்தப்பிரபஞ்சத்தின் உற்பத்திக்குக் காரணமாதலின் அக்ஷரம் மாதிருகா எனப்படும். மாதா மாதிருகா என்பன ஒரு பொருளன. ஸ்தவம் என்பது துதி.

மேலும் இத்தோத்திரம் தேவியை மானதமாகப் பூசிக்கும் முறையைக் குறிப்பது என்பது. அதனால் இது மானசபூஜாத் தோத்திர மெனப்படும். மானஸபூஜை மனத்தினாற் செய்யப்படும் பூசை.

கடவுளை வழிபடும் முறை இரண்டு வகைப்படும், அகப் பூசை புறப்பூசை யென. அகப்பூசையாவது இஷ்டதெய்வத்தை மனத்திலிருத்திப் பாவனையாற் செய்யும் பூசை; புறப்பூசையாவது இஷ்டதெய்வத்தின் அருளுருவைப் புறம்பே அமைத்துப் பூசைக்கு வேண்டிய மஞ்சனம், மலர் முதலிய உபகரணங்களைச் சம்பாதித்து வைத்துக்கொண்டு சித்த சுத்தியோடு அவ்வுருவிற்

பூசைசெய்தலாம். புறப்பூசைக்குவேண்டிய பொருள்களை யெல்லாம் மனத்தினுல் அமைத்துக்கொண்டு முறைப்படி பாவ னையினுல் வழிபடும் இம்மானஸபூசை புறப்பூசை தொடங்கு தற்குமுன் செய்யப்பட்டு, மூர்த்தியைப் புறத்தே வந்து பூசனை கொண்டருளல் வேண்டும் எனப் பிரார்த்திப்பதாகிய ஒரு பூர்வாங்கம் எனக் கிரியாமுறையிற் கூறப்படும்.

பூசனை செய்யுங்கிரமத்தை,

"ஐங்கரன்றன் மாலுரைத்த மாற்றங் கேளா
அன்னதுசெய் கெனவருளி அங்கண் மேவக்
கொங்குலவு மஞ்சனநீர் சாந்த மாலை
கொழும்புகையே முதலியன கொண்டு போந்து
சங்கரனூர் மதலைதனை யருச்சித் தன்பால்
தாவறுபண் ணியம்பலவும் சால்பிற் றந்து
பொங்கியபா லவியினுடன் முன்ன மார்த்திப்
போற்றியே யிஃதொன்று புகற லுற்றான்."

(கந்த - புரா.)

எனவும்,

"கந்த வர்க்கழங் கிளர்மணப் புகையுங்
கவின்கொள் தீபமும் புனிதமஞ் சனமும்
கொந்த விழ்ந்தநன் மலருமற் றுளவுங்
கொண்டு மாயையின் குணங்களோன் றிலராய்ப்
பஞ்ச சுத்திசெய் தகம்புற மிறைஞ்சி
அங்கி யின்கடன் கழித்தருள் வழிநின்
றிந்த நற்பெருங் கிரியையன் புடனே
இயற்ற வல்லவ ரெம்மரு கிருப்பார்." (திருவா. புரா.)

எனவும் வருஞ் செய்யுட்களா னறியலாம்.

தேவ ஸ்தோத்திரங்களுள் மானஸிகபூசா ரூபமான தோத் திரங்கள் தமிழில் மிகக்குறைவாய் இருப்பதால் இத்தோத்திரம் தமிழ் அன்பர்களுக்கு மிக்க பயனுடைத்தாகும் என்பது.

(2) கௌரீ தசகம்:—

இதுவும் ஸ்ரீமத் ஆசாரிய சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது. ஸ்ரீ கௌரி தேவியைக் குறித்துச் சொல்லப்பட்ட பத்துச் செய்யுட்களைக் கொண்ட தோத்திரம் என்பது இதன் பொருள். கௌரீ என்பது உமாதேவியார். தசகம் என்பது பத்தின் கூட்டம், தச பத்து. தசகம் என்பது வடமொழி, அது தமிழில் பதிகம் எனப்படும். வடமொழி மூலத்தில் "கௌரீம் அம்பாம் அம்புருஹாக்ஷீம் அஹம் ஈடே" என்னும் ஓரே அடி ஒவ்வொரு செய்யுளிலும் நாலாம் அடியாகப் பத்துச் செய்யுளிலும் வர அமைக்கப்பெற்றிருப்பது இத் தசகம் என்பதுங் கண்டுகொள்க.

(3) ராஜ ராஜேஸ்வரி அஷ்டகம்:—

இதனை இயற்றியவர் யாவரென்பது நன்கு தெரியவில்லை. இதுவும் ஆசாரிய சுவாமிகள் வாக்கு என்பது சிலர் கொள்கை.

ராஜராஜேஸ்வரி அஷ்டகம் என்பது ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தேவியைக் குறித்து எட்டுச் செய்யுட்களாற் செய்யப்பட்ட தோத்திரம் எனப் பொருள்படும். ராஜராஜேஸ்வரி என்பது உமாதேவியாரது திருநாமங்களுள் ஒன்று. அஷ்டகம் எட்டின் கூட்டம், அஷ்ட (அட்ட) என்பது எட்டு. ராஜராஜேஸ்வரி என்பது அரசர்க்கரசர்களாகிய பிரமா முதலிய காரணேஸ்வரர் ஐவர்க்கும் மேலாகிய ஈஸ்வரி (இறைவி) யாயிருப்பவள் என்று பொருள்படும். ஒளிதரும் பொருள்களாகிய சூரியன் முதலியவற்றிற்கும் ஒளிகொடுத்துச் சுயம் பிரகாசமாயிருப்பவள் எனினுமாம்.

இத்தோத்திரத்தில் தேவியின் பல திருநாமங்களும் அருட்குணங்களும் செயல்களும் சொல்லப்படும். வடமொழி மூலத்தில் ஒவ்வொரு சுலோகமும் அம்மை என்னும் பொருள்படும் 'அம்பா" என்னுஞ் சொல்லை முதலாகக்கொண்டு தொடங்கி, "சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ" என்பதை

ஈற்றடியாகக் கொண்டு முடிவது. தேவிக்கு "நாமபாராயண ப்ரீதா" என்று ஒரு திருநாமம் உண்டு. தனது திருநாமங்களைச் சொல்லித் துதிப்பவரை உவந்து அவர்க்கு அருள் சுரப்பவள் என்பது அதன் பொருள். அருட் சத்தியாகிய அம்பிகையின் திருநாமங்களைக் கூறும் இத்தோத்திரத்தைப் பாராயணஞ் செய்பவர்கள் அவளது திருவருளுக்குப் பாத்திரராவார்கள் என்பது சித்தம்.

பணிந்துரை.

இலக்கண விலக்கியத் தறிவி லேன்னுரை
விலக்கண மேனினுமங் கதுவே றுப்பரோ
புலக்கண கத்துடைப் புலமை யோர்வரு
மலக்கண தகற்றனை மேற்கோ ளன்பினல்.

கண்டி,
15—5—38.

தி. சதாசிவ ஐயர்.

உ

சிவமயம்.

தேவி துணை.

ஸ்ரீமந்திர மாதிருகா

புஷ்பமாலா ஸ்தவம்

என்னும்

தேவி மானஸபூசை

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

1. கறங்கலை யமுதப் பெருங்கட லகத்துக் காண்டகு கவின்மணித் தீவிற்
பிறங்குகற் பகக்காச் சூழ்வர நாப்பட் பெட்புறு கடம்பவா டிகையில்
நிறங்கெழு மணித்தூ ணாயிர நெருங்குஞ் சபைநடு நிமிர்விமா னத்தே
திறங்கெழு சிந்தாமணி புனைசிங்கா சனமனத் தமைக்குவ னம்மே!

2. எதமின் மதிய மங்கிசெங் கதிரோ னியைசிறீ சக்கர நிலையும்
ஆதவ னுதயக் கதிர்நிகர் நிறமும் அங்குச பாசம்வில் லம்புப்
போதமர் செங்கை மலர்களுங் கருணைப் பொலிவுடை முகமுஞ்செவ் வுடையும்
மேதகு நினது பிறையணி முடியு மென்னகை யும்நினைக் குவனே.

3. ஈசுரன் முதலோர் கால்களாச் சிவனை பலகையா யியல்மணித் தவிசும்
பேசுபாத்தியமுங் குங்குமஞ் சாந்தம் பிறவுடன் இர்த்தினட்சதையும்
தேசுறக் கூட்டி யாக்கருக் கியமும் தெளிபுன லாசம னியமும்
நேசமாய் மனத்து நேர்ந்தனன் கொள்வாய் நிறையருள் அமுதவா ரிதியே!

4. லட்சியம் யோகர் கருத்தினுக் காவோய்! எழிற்றடங் கண்ணி! யெவ்
வுலகும்
ரட்சியா நிற்போய்! இமசலஞ் சாந்தங் குங்கும மிலங்குகர்ப் பூரம்
இட்டளா வியநீர் பாலிள நீர்மந் திரித்தசுத் தோதக மெனவே
நட்பினுன் மனத்து வகுத்திடு நாநம் நயந்தருள் தேவி! நன் கிவையே.

5. ஹ்ரீமெனு மெழுத்தார் மந்திர வடிவி! இமயத்து வருமணி கோத்து
வாமமுற் றொளிரும் உத்தரீயகமும் வயங்குமென் செய்யபூந் துகிலும்
தாமமுற் றிலங்கு தாளவெண் மணிசேர் தமனியத்தியன்றதா நூலும்
ஆமிவை மனத்து நேர்ந்தனன் தேவி! அவையெலா முவந்துகொண்
டருளே.

6. ஹ (அ) ஞ்சமு நயந்து பயிலுமென் னடையாய்! எற்றருள் ஆரமுஞ்
சுடர்விட்
டுஞ்சலின் எறிக்கும் வச்சிர மலிந்த ஒண்பொனி னங்கதம் கடகம்
எஞ்சலில் சிலம்பும் அரதனக் குழையும் இளமதி புனைமணி முடியும்
கஞ்சமென் கரத்தங் குலியமுங் காஞ்சி கங்கணம் மூக்கணி
யிவையே.

7. சரு (ர்) வமா மங்கஞ் சாத்துகர்ப் பூர சந்தன குங்குமக் குழம்பும்
உருவமார் நுதற்காந் திலகமான் மதமும் ஒளிர்கபோ லத்தலத்
தியையும்
பருவமார் கோரோ சனைத்தொயிற் கூட்டும் பாவரி விழிகட்கஞ்
சனமும்
மருவமர் கமலக் களத்தினுக் கமல மான்மதச் சேறுமேற் றருளே.

8. கல்லகா ரமதோ டுற்பல மௌவல் கவினுமல் லிகைமருக் கொழுந்து
மல்லலங் கனகத் தாமரை சாதி சண்பக மாலதி வகுளம்
அல்லிமந் தாரம் கேதகி யலரி யாதியாம் விதங்கெழு மலர்கள்
புல்லல்செய் மாலை வகைபல வரதே! புந்தியாற் றொடுத்தகொள்
மகிழ்ந்தே.

9. ஹ(அ)தமுற மதனை விழித்தவன் றன்னை அன்பினிற் பொலிவுறுன்
னங்கம்
இதமுறச் செய்வ சுரும்பினஞ் சூழுன் எழிற்கனங் குழற்பர
மவன்றன்

இதயமும் பிணிப்ப அத்தகைச் செவ்வி எமவைப் பாமவை அன்னே!
முதமுறத் தசாங்கம் குக்குலு நறுநெய் முதலிய தூபநேர் குவனே.

10. லக்குமி விளங்கச் செய்குவன் மனத்தால் இனமணி யெறிக்குமா லயத்தில்
தொக்கநன் மணிக்கால் தூங்குறும் விளக்குஞ் சொலத்தகு சித்திர விளக்கும்
மிக்கபொற் பதுமைக் கரத்தொளிர் பாவை விளக்குமென் றினைப்பல தீபம்
தக்கவான் நெய்கொ டேற்றினன் இமயத் தநயை! நீ உவந்து கொண் டருளே.

11. ஹ்ரீம்மனு முதல்வி! அபரஞ்சி யதனின் இயன்றபல் கலங்களிற் படைத்த
தோமறு சுத்தான் னத்தொடு நெய்யும் சூபவெஞ் சனங்களும் வகைய
வாமறு சுவையோ தனங்களும் பாலி னன்னமும் பாகுதேன் தயிரும்
மாமணிக் கலத்திற் படைத்துநற் கனியும் வடைகளு நிவேதிப்ப னம்மே!

12. சந்தமார் தாழை யிளந்தளிர் நிறத்தாம் பூலியும் வெகுகுண முறநற்
கந்தமார் மதுரப் பாகுங்கர்ப் பூர கண்டமுங் கவினுற முத்தின்
வந்தவால் நீறும் ஒளிதர வதன மலர்மண முறநறும் பொருளும்
சிந்தையால் மணிக்கா ளாஞ்சியில் நிறைத்துன் திருமுன்பு சேர்த்து வனுமையே!

13. கன்னியர் வனப்பிற் காமுறுந் தகையர் கவினுமங் கலவா ரத்தி
துன்னிய முத்து நிரைபுனே தட்டிற் சுடர்கொள்கர்ப் பூரமுங் கொளுவி
இன்னியற் ருள மத்தளங் கீதம் இசைவுறப் பயில்நடத் தடனே
மன்னிய நீராஞ் சனம்மறை யோதி வழங்குவ துவந்துகொண் டருளே.

14. லக்குமி யிலகு தாளவெண் கவிகை யேந்துவள் சசிரதி யென்போர்
தொக்கபொற் கவரி யிரட்டுவர் பரிவாற் சொற்கலை வாணிகைப் பரித்தி
யக்குறும் வீணை இசைப்படு குறிப்பால் இயலுமெய்ப் பாட்டிணு விரச
மிக்குற நிருத்தம் அரம்பையர் புரிவர் வியந்திவை கண்டருள் அம்மே!

15. ஹ்ரீமெனு மொருமூன் றியையுமந் திரத்தால் தொழத்தகும் இறைவி!தொல் மறையீ
றுமெனு முபநிட தப்பொருள் வடிவி! ஆருனைத் துதிசெயுந் தகையோர்
நாமனு தினஞ்செய் பேச்சுநிற் றுதித்தல் நடத்தலு முனைவலம் வருதல்
ஆமன நிகழு மாயிரங் கனவும் அம்மை! நிற் குவந்தவா குகவே.

16. ஸ்ரீவரு மனுவா ரக்கர மாலை இமயமா மகடனக் கணிந்து
தாவரு நியமத் தனுதின மனத்தாற் சாருமுப் போதம்பூ சிப்போர்
மேவரு மனந்தூய் தாமுளக் கமல வீட்டினி லுமைநடம் புரியும்
நாவருங் கலையின் செல்விசெங் கமலை நண்ணுமாங் கவர்மனை நயந்தே.

வேறு.

17. இன்ன வாறிம வான்மகள் பதமலர்க் கணியாய்த்
துன்னு நல்லுரை நறையினால் தூய்மைசெய் துலகைப்
பன்னு நற்சிவ பதமக ரந்தமுன் இறைத்து
மன்னு மந்திர மாலிகை களிகவி யளிக்கே.

முற்றிற்று.

தேவி துணை.

உ

சிவமயம்.

தேவி துணை.

கௌரிப் பத்து.

நூல் வரலாறு—வெண்பா

சங்கரா சாரியர்முன் சாற்றினார் ஆரியத்திற்
பொங்கரா ஆழி புனைந்தமலை—மங்கையாண்
மீதுகௌ ரீதசக மேலதனை யின்றமிழால்
ஓதினேன் கொள்க உவந்து.

(அறுசீர் ஆசிரிய விருந்தம்)

1. உலகனைத்து முளவாக்கி நிலைபெறுத்தி யொடுக்கிவிளை யாடல் செய்வாள்
உலகிறந்த யோகியர்த முள்ளமதி லோவாது நேட நிற்பாள்
அலகிலிள ஞாயிறொன்று யுதித்ததென அவிர்சோதிப் பிழம்ப தாவாள்
இலகுவிழி கமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சுகேனே.

2. பாதமலர் மனத்திருத்திப் பரவுதியா னத்தகலாப் பண்பி னோர்க்கு
வாதனைசெ யவாத்தளையின் வருதுயர மாய்த்தருள்வா ளுலகம் யாவும்
எதமற ஆளிறைவி இறைவனுடற் பாதிகொண்டாள் எழிலான் மிக்காள்
காதமரும் விழிகமல மானுமம்மை கௌரிபையா னிறைஞ்சு கேனே.

3. பலவிதமாந் தனதுசத்தி கணஞ்செறித்தே பரந்தபுவ னங்க ளெல்லாங்
கலந்தனைத்து மாட்டுவித்துங் கலப்பின்றித் தானேயாய்க் கலித்து நிற்பாள்
நலமுதவு மங்கலைதாள் வணங்குநர்க்கு நல்குகற்பக் கொடியே யாவாள்
இலகுவிழிகமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சு கேனே.

4. மூலமதி லெழுஞ்சுழுனை வழியாக முனநடந்து தபனற் றூண்டிச்
சாலுமதி பதமேவி யமுதநிலை சார்ந்தாடல் புரியுந் தேவி
சாலவதி சூக்குமத்திற் , சூக்குமமாந் தனுவுடையாள் சுகஞ்செய் கிற்பாள்
எலுமரி விழிகமல மானுமம்மை கௌரியையா னிறைஞ்சு கேனே.

5. சரவசர வுலகனைத்துங் கலந்துவியா பகமாகித் தன்னில் யாவுஞ்
சரமருவு மணியினிரை யெனவிளங்கத் தானகத்துக் சார்வாய் நிற்பாள்
வாமருவு பாத்தியல்தேர் ஆன்மஞான மார்க்கமதா லடையத் தக்காள்
இருவரிய விழிகமல மானுமம்மை கௌரியையா னிறைஞ்சு கேனே.

6. புலங்கழிந்து பொறியடக்கப் பொருளொன்றின் மனமிருத்திச் சமாதி புக்கோர்
துலங்ககத்திற் சின்மயமாஞ் சுகோதயஞ்சேர் வித்தருளுந் தூயை யென்றும்
மலங்கதுவாச் சத்தொடுசித் தானந்த மயவடிவி சிறுநு சுப்பாள்
இலங்குவிழி கமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சுகேனே.

7. நிலவுமிழு மதிமுடித்தோ னேயமுற முகிழ்த்தகுறு நகைமு கத்தாள்
நிலவுபிறை முடியணியா நிமிரளக பாரநிரை பரிக்குந் தேவி
வலவயிரி முரவயிரி யாதியர்கள் வழுத்துமிணை மலர்ப்ப தத்தாள்
இலகுவிழி கமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சுகேனே.

8. சொலுமகரம் க்ஷகாமுதல் முடிவெழுத்தா யழிவிலதாய்த் துலங்கு மெய்யாள்
நிலமுதலாம் பூதபுவ னத்துநாநா வுயிர்க்கூட்ட நிகழத் தந்தாள்
நிலவுமொலிப் பிரமமதா மானந்த மயிமின்னை நிகர்தே சுற்றுள்
இலகுவிழி கமலமலர் மானுமம்மை கௌரிய்யையா னிறைஞ்சுகேனே.

9. அலகிலுல கண்டமவை யனைத்துமெவள் வயிற்றடங்கி மேலு மேலும்
விலகலின்றி வெளிவந்து விரிந்திடுமெத் தகையவருள் மேவு மன்னை
குலவுபெரு நேயமுறு கொழுநனுடன் வெள்ளிமலை குலாவுந் தேவி
இலகுவிழி கமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சுகேனே.

10. மலரகிதன் நித்தியன்நிட் களனேக னுருமிறை வயங்கச் சான்றாய்ப்
பலவுலகும் படைத்தருளித் துடைத்திடுமெப் பரந்தானே பரிக்கும் சத்தி
நலமுலவச் சகம்பரிபா லிக்குமாடல் நயப்புமிக்கா ளரன்றன்பன்னி
இலகுவிழி கமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சுகேனே.

(நூற்பயன்—வேறு.)

11. நித்தமுங் காலைப் போதில் நேயமார் நெஞ்சுஞ் சித்த
சுத்தியுங் கொண்டு கௌரிப் பத்திது சொல்வோர் வாக்குச்

சித்தியும் மேலாஞ் செல்வ வாழ்க்கையுஞ் சிவத்தி லாழ்ந்த
பத்தியும் பெறுவர் அன்னை பார்வதி யருளான் மாதோ.

கௌரிப் பத்து முற்றிற்று.

தேவி துணை.

உ

சிவமயம்.

தேவி துணை.

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அஷ்டகம்

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

1. அன்னை சாம்பவி பிறைமுடி அபலை
    அபர்ணை பார்வதி உமையருட் காளி
மன்னி மாசல மகள்சிவை காத்யா
    யனிமுக் கண்ணிநற் பயிரவி கருணை
தன்னு சாவித்ரி யழிவில்யவ் வனத்தாள்
    சுபஞ்செய் வாள்நிறை பெருந்திரு அருள்வாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
    தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. (க)

2. அன்னை மோகினி தேவிமுப் புவன
    அகண்ட ரூபிணி பெருமகிழ் வளிப்பாள்
மன்னு நற்கலை வடிவினள் தளிர்க்கை
    வயங்கு வேய்ங்குழற் கானத்தின் விருப்பாள்
நன்னர் மங்கலை யுடைபதி நிகரு
    நலங்கொ ளானனி புகைக்கணற் செருத்தாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
    தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. (உ)

3. அன்னை பொற்சிலம் பாதனக் கடகம்
அங்க தங்குளிர் முத்தணி யணிவாள்
மன்னு சம்பகஞ் சாதிமென் மலர்நன்
மாலை யாள்கழுத் தணியொளி திகழ்வாள்
துன்னு வீணையுங் குழலுமிக் கனிசெய்
தொடிக்க ரத்திவீ ராசனத் திருப்பாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. (௩)

4. அன்னை ரௌத்திரி பத்திர காளி
வகலை வைணவி யாரழன் முகத்தி
மன்னு நற்பிரம் மாணிமுப் புரங்காய்
வயிரி வானவர் வழுத்துசெஞ் சோதி
தன்னை யண்டினர்ப் புரந்தரு ளம்மை
தக்கன் மாமகள் சாமுண்டி வலவை
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. (௪)

5. அன்னை சூலம்வி லங்குச பாசம்
அடுத்த கையினள் பிறைமதி யணிவாள்
பொன்னும் வாணியும் போற்றிடுந் தகையாள்
வராகி மாமது கைடவர்ச் செறுத்தாள்
சின்ன மாகமல் லாசுர மூகர்ச்
சிதைத்த நங்கையம் பிகைமகேச் சுவரி
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. (௫)

6. அன்னை முத்தொழில் புரிபவள் மேலாம்
அணங்கு மிக்குயர்ந் தொளிர்தரு நிறத்தாள்
மன்னு காயத்ரி பிரணவ அமுத
சார பூரணி வழிபடற் குரியாள்
தன்னை நேரிலோங் காரிதாழ் விநதை
தனயற் காத்தவள் தைத்தியர்ச் செகுப்பாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. (௬

7. அன்னை நித்தியை ஆகம மாதி
வழுத்த நின்றவள் ஆரியை தேவி
அன்ன வாகனன் முதலெறும் பீரும்
அனைத்து மீன்றவள் செகமயல் புரிவாள்
வன்ன பஞ்சகப் பிரணவ மாதி
வகுத்த தாயகி மாலினி மனத்தாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. (எ)

8. அன்னை அட்டகம் அனுதினம் அன்பின்
அகன்ற சிந்தையிற் படிக்குநல் அடியார்
அன்னை தன்கடைக் கண்ணருள் நோக்கம்
அடைவ ரிங்கழி யாப்பெருந் திருவும்
அன்னை தூயமந் திரப்பெருந் துதியால்
அரன்ச மீபமன் னரும்பதம் அளிப்பாள்
சின்ம யீயருட் பகவதி திருவார்
தேவி ராஜரா ஜேஸ்வரி பரையே. (அ)

ஸ்ரீராஜராஜேஸ்வரி அஷ்டகம்

முற்றிற்று.

தேவி துணை.

உ

|| श्रीमहात्रिपुरसुन्दर्यै नमः ||

|| मन्त्रमातृकापुष्पमालास्तवः ||

தேவி மானஸ பூஜை

कल्लोलोल्लसितामृताब्धिलहरी मध्येविराजन्मणि-
द्वीपे कल्पकवाटिकापरिवृते कादम्बवाट्युज्ज्वले ।
रत्नस्तम्भसहस्रनिर्मितसभामध्ये विमानोत्तमे
चिन्तारत्नविनिर्मितं जननि ते सिंहासनं भावये ॥ १ ॥

கல்லோலோல்லஸிதாம்ருதாப்திலஹரீமத்யே விராஜந்மணி-
த்வீபே கல்பகவாடிகாபரிவ்ருதே காதம்பவாட்யுஜ்ஜ்வலே ।
ரத்நஸ்தம்பஸஹஸ்ரநிர்மிதஸபாமத்யே விமாநோத்தமே
சிந்தாரத்நவிநிர்மிதம் ஜநநி தே ஸிம்ஹாஸநம் பாவயே ॥ ௧

(இ-ள்.) அலைகளினாற் பிரகாசிக்கின்ற அமிர்தக்கடற் பெருக்கினிடையே விளங்குகின்ற மணித்தீவில் கற்பகதருக்கள் வேலியாய்ச்சூழப்பெற்ற ஒளிமயமான கடப்பமரச் சூழலில் இரத்தின கசிதமான ஆயிரக்கால் மண்டபத்தில் அமைந்த மேலாகிய கோயிலின்கண் சிந்தாமணிகளாலாகிய சிம்மாசனத்தை, ஹே அம்மையே! மனத்தில் இருத்துகின்றேன். (எ-று.)

இது தேவிக்கு ரத்திந சிங்காசனம் அமைத்தவாறு.

(தமிழ் மொழிபெயர்ப்புச் செய்யுள்)

1. கறங்கலை யமுதப் பெருங்கட லகத்துக் காண்டகு கவின்மணித் தீவிற்
பிறங்குகீற் பகக்காச் சூழ்வர நாப்பட் பெட்புறு கடம்பவா டிகையில்
திறங்கெழு மணித்தா ளாயிர நெருங்குஞ் சபைநடு நிமிர்விமா னத்தே
திறங்கெழு சிந்தா மணிபுனை சிங்கா சனமனத் தமைக்குவ னம்மே.

கறங்குதல்—ஒலித்தல். வாடி (வாடிகை)—வேலி, வளைப்பு. விமானம்—மாளிகை, கோயில்.

एणाङ्कानलभानुमण्डललसच्छ्रीचक्रमध्ये स्थितां
बालार्कद्युतिभासुरां करतलैः पाशाङ्कुशौ बिभ्रतीम् ।
चापं बाणमपि प्रसन्नवदनां कौसुम्भवस्त्रान्वितां
तां त्वां चन्द्रकलावतंसमकुटां चारुस्मितां भावये ॥ २ ॥

𑌏𑌣𑌾𑌙𑍍𑌕𑌾𑌨𑌲𑌭𑌾𑌨𑍁𑌮𑌣𑍍𑌡𑌲𑌲𑌸𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌚𑌕𑍍𑌰𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌂
𑌬𑌾𑌲𑌾𑌰𑍍𑌕𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌭𑌾𑌸𑍁𑌰𑌾𑌂 𑌕𑌰𑌤𑌲𑍈𑌃 𑌪𑌾𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑍌
𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍀𑌮𑍍 ।
𑌚𑌾𑌪𑌂 𑌬𑌾𑌣𑌮𑌪𑌿 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑌾𑌂 𑌕𑍌𑌸𑍁𑌮𑍍𑌭𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌂
𑌤𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌲𑌾𑌵𑌤𑌂𑌸𑌮𑌕𑍁𑌟𑌾𑌂 𑌚𑌾𑌰𑍁𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌂 𑌭𑌾𑌵𑌯𑍇 ॥

(இ - ள்.) சந்திர அக்கினி சூரியமண்டலங்களாய் விளங்குகின்ற ஸ்ரீசக்கிர மத்தியில் இருப்பவளும், உதய சூரியனது கிரணங்களைப்போல் பிரகாசிப்பவளும், திருக்கரங்களில் பாசம் அங்குசம் வில் அம்பு என்பவற்றைத் தரித்திருப்பவளும் மலர்ந்த திருமுகத்தை யுடையவளும், செம்பட்டாடை யணிந்திருப்பவளும், மேலாகிய சந்திரகலை யணிந்த முடி கவித்திருப்பவளும், அழகிய புன்முறுவல் செய்பவளுமாக (த்தாயே!) உன்னைத் தியானிக்கின்றேன். (எ - று.)

இது தியானம்.

(த - சே.)

2. எதமின் மதிய மங்கிசெங் கதிரோ னியைசிறீ சக்கர நிலையும்
ஆதவ னுதயக் கதிர்நிகர் நிறமும் அங்குச பாசம்வில் லம்புப்
போதமர் செங்கை மலர்களுங் கருணைப் பொலிவுடை முகமுஞ்செவ்வுடையும்
மேதகு நினது பிறையணி முடியு மென்னகை யும்நினைக் குவனே.

224737

ईशानादिपदं शिवैकफलकं रत्नासनं ते शुभं
पाद्यं कुङ्कुमचन्दनादिभरितैरर्घ्यं सरत्नाक्षतैः ।
शुद्धैराचमनीयकं तव जलैर्भक्त्या मया कल्पितं
कारुण्यामृतवारिधे तदखिलं संतुष्टये कल्पताम् ॥ ३ ॥

𑌈𑌶𑌾𑌨𑌾𑌦𑌿𑌪𑌦𑌂 𑌶𑌿𑌵𑌐𑌕𑌫𑌲𑌕𑌂
𑌰𑌤𑍍𑌨𑌾𑌸𑌨𑌂 𑌤𑍇 𑌶𑍁𑌭𑌂
𑌪𑌾𑌦𑍍𑌯𑌂 𑌕𑍁𑌙𑍍𑌕𑍁𑌮𑌚𑌨𑍍𑌦𑌨𑌾𑌦𑌿𑌭𑌰𑌿𑌤𑍈-
𑌰𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌸𑌰𑌤𑍍𑌨𑌾𑌕𑍍𑌷𑌤𑍈𑌃 ।
𑌶𑍁𑌦𑍍𑌧𑍈𑌰𑌾𑌚𑌮𑌨𑍀𑌯𑌕𑌂 𑌤𑌵 𑌜𑌲𑍈-
𑌰𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑌯𑌾 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂
𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌵𑌾𑌰𑌿𑌧𑍇 𑌤𑌦𑌖𑌿𑌲𑌂
𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑍇 𑌕𑌲𑍍𑌪𑌤𑌾𑌮𑍍 ॥ ௩

Q25:417
N39

(இ - ள்.) மகேசுரன் முதலியவர் (நாலு) கால்களாகவும் சதாசிவன் பலகையாகவும் அமைந்த ரத்தின ஆசனமும், நன்கிதாகிய பாத்தியமும், குங்குமம் சந்தனம் முதலியன சேர்த்து இரத்தின அட்சதையோடு கூடிய அர்க்கியமும், பரிசுத்தமாகிய ஜலத்தினால் ஆசமனீயமும் ஆகிய இவை அனைத்தும், அருளமுதப்பெருங்கடலாகிய தாயே! பக்தியோடு என்னால் அமைக்கப் படுவன நினக்குப் பெருமகிழ்வைத் தருபவை யாகுக. (எ - று.)

இரத்தினாசனம் என்பது பிரமா, விஷ்ணு, ருத்திரன், மகேசுரன் என்னும் நால்வரும் நாலுகால்களாகவும் சதாசிவன் பலகையாகவும் அமைந்த அரசுகட்டில் என்றவாறு. பாத்தியம்

கால்கழுவக்கொடுக்கும் நீர். அர்க்கியம் என்பது பூசித்தலில் உபசாரமாகக் கையில் வழங்கப்படும் அட்சதை அறுகு நீர் முதலியன கலந்த பூசாத்திரவியம். ஆசமனீயம் ஆசமனஞ் செய்தற்குத் தகுதியான நீர். ஆசமனம் உள்ளங்கையில் அடங்கும் நீர் முதலியவற்றை உட்கொள்ளல்.

(த. சே.)

3. ஈசுரன் முதலோர் கால்களாச் சிவனே பலகையா யியல்மணித் தவிசும்
பேசுபாத் தியமும் குங்குமஞ் சாந்தம் பிறவுடன் இரத்தினட் சதையும்
தேசுறக் கூட்டி யாக்கருக் கியமும் தெளிபுன லாசம னியமும்
நேசமாய் மனத்து நேர்ந்தனன் கொள்வாய் நிறையருள் அமுதவா ரிதியே.

लक्ष्ये योगिजनस्य रक्षितजगज्जाले विशालेक्षणे
प्रालेयाम्बुपटीरकुङ्कुमलसत्कर्पूरमिश्रोदकैः ।
गोक्षीरैरपि नालिकेरसलिलैः शुद्धोदकैर्मन्त्रितैः
स्नानं देवि धिया मयैतदखिलं संतुष्टये कल्पताम् ॥ ४ ॥

𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌯𑍋𑌗𑌿𑌜𑌨𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌜𑌗𑌜𑍍𑌜𑌾𑌲𑍇 𑌵𑌿𑌶𑌾𑌲𑍇𑌕𑍍𑌷𑌣𑍇
𑌪𑍍𑌰𑌾𑌲𑍇𑌯𑌾𑌮𑍍𑌬𑍁𑌪𑌟𑍀𑌰𑌕𑍁𑌙𑍍𑌕𑍁𑌮𑌲𑌸𑌤𑍍𑌕𑌰𑍍𑌪𑍂𑌰𑌮𑌿𑌶𑍍𑌰𑍋𑌦𑌕𑍈𑌃 ।
𑌗𑍋𑌕𑍍𑌷𑍀𑌰𑍈𑌰𑌪𑌿 𑌨𑌾𑌲𑌿𑌕𑍇𑌰𑌸𑌲𑌿𑌲𑍈𑌃
𑌶𑍁𑌦𑍍𑌧𑍋𑌦𑌕𑍈𑌰𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑍈𑌃
𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌦𑍇𑌵𑌿 𑌧𑌿𑌯𑌾 𑌮𑌯𑍈𑌤𑌦𑌖𑌿𑌲𑌂 𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑍇
𑌕𑌲𑍍𑌪𑌤𑌾𑌮𑍍 ॥ ௪

(இ - ள்.) யோகியர் கருத்தின் இலட்சியமாயிருப்பவளே! உலகனைத்தையும் பரிபாலிப்பவளே! விசால நேத்திரங்களை யுடையவளே! பனிநீர், சந்தனம், குங்குமம், வெள்ளிய கர்ப்பூரம்

என்பவை கலந்த நீரினுலும், பசுப்பாலினுலும், இளநீரினுலும், மந்திர செபஞ் செய்யப்பெற்ற சுத்த சலத்தினுலும் மானவிக மாக என்னுல் ஆக்கிய திருமஞ்சனம் ஆகிய இவையெல்லாம், தேவியே! நினைக்கு மகிழ்வைத் தருவன வாகுக. (எ - று.)

4. லட்சியம் யோகர் கருத்தினுக் காவோய்! எழிற்றடங் கண்ணி! யெவ்வுலகும்
ரட்சியா நிற்போய்! இமசலஞ் சாந்தங் குங்கும மிலங்குகர்ப் பூரம்
இட்டளா வியநீர் பாலிள நீர்மந் திரித்தசுத் தோதக மெனவே
நட்பினுன் மனத்து வகுத்திடு நாகம் நயந்தருள் தேவி! நன் கிவையே.

நாகம்—மஞ்சனம், முழுகுதல்.

ह्रींकाराङ्कितमन्त्रलक्षिततनो हेमाचलात् सञ्चितै
रत्नैरुज्ज्वलमुत्तरीयसहितं कौसुम्भवर्णांशुकम् ।
मुक्तासंततियज्ञसूत्रममलं सौवर्णतन्तूद्भवं
दत्तं देवि धिया मयैतदखिलं संतुष्टये कल्पताम् ॥ ५ ॥

𑌹𑍍𑌰𑍀𑌂𑌕𑌾𑌰𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌤𑌨𑍋
𑌹𑍇𑌮𑌾𑌚𑌲𑌾𑌤𑍍 𑌸𑌂𑌚𑌿𑌤𑍈
𑌰𑌤𑍍𑌨𑍈𑌰𑍁𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌸𑌹𑌿𑌤𑌂
𑌕𑍌𑌸𑍁𑌮𑍍𑌭𑌵𑌰𑍍𑌣𑌾𑌂𑌶𑍁𑌕𑌮𑍍 ।
𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑌂𑌤𑌤𑌿𑌯𑌜𑍍𑌞𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑌮𑌲𑌂 𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑌤𑌨𑍍𑌤𑍂𑌦𑍍𑌭𑌵𑌂
𑌦𑌤𑍍𑌤𑌂 𑌦𑍇𑌵𑌿 𑌧𑌿𑌯𑌾 𑌮𑌯𑍈𑌤𑌦𑌖𑌿𑌲𑌂
𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑍇 𑌕𑌲𑍍𑌪𑌤𑌾𑌮𑍍 ॥ ௫

(இ - ள்.) ஹ்ரீம் என்னும் அட்சரம் பொருந்தப் பெற்ற மகாமந்திர வடிவமாயிருப்பவளே! பொன்மலையிடத்திற் சேகரிக்கப்பட்ட மணிகள் கோத்துப் பிரகாசிக்கின்ற உத்தரீயத்

தோடு சேர்ந்த செம்பட்டாடையும், பொன்னாற் செய்த நூலில் (சரட்டில்) முத்து நிரை கோக்கப்பெற்ற பரிசுத்த மாகிய பூணூலும் ஆக மானஸிகமாக என்னாற் சமர்ப்பிக்கப் பட்ட இவை யெல்லாம், தேவியே! நினக்கு மகிழ்வைத்தருவன வாகுக. (எ - று.)

(த. சே.)

5. ஹ்ரீமெனு மெழுத்தார் மந்திர வடிவி! இமயத்து வருமணி கோத்து
வாமமுற் றொளிரும் உத்தரீ யகமும் வயங்குமென் செய்யபூந் துகிலும்
தாமமுற் றிலங்கு தரளவெண் மணிசேர் தமனியத் தியன்றதா நூலும்
ஆமிவை மனத்து நேர்ந்தனன் தேவி! அவையெலா முவந்து கொண்
டருளே,

हंसैरप्यतिलोभनीयगमने हारावलीमुज्ज्वलां
हिंदोळद्युतिहीरपूरिततरे हेमाङ्गदे कङ्कणे ।
मञ्जीरौ मणिकुण्डले मकुटमप्यर्धेन्दुचूडामणिं
नासामौक्तिकमङ्गुलीयकटकौ काञ्चीमपि स्वीकुरु ॥ ६ ॥

𑌹𑌂𑌸𑍈𑌰𑌪𑍍𑌯𑌤𑌿𑌲𑍋𑌭𑌨𑍀𑌯𑌗𑌮𑌨𑍇 𑌹𑌾𑌰𑌾𑌵𑌲𑍀𑌮𑍁𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌾𑌂
𑌹𑌿𑌨𑍍𑌦𑍋𑌲𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌹𑍀𑌰𑌪𑍂𑌰𑌿𑌤𑌤𑌰𑍇
𑌹𑍇𑌮𑌾𑌙𑍍𑌗𑌦𑍇 𑌕𑌙𑍍𑌕𑌣𑍇 ।
𑌮𑌞𑍍𑌜𑍀𑌰𑍌 𑌮𑌣𑌿𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑍇 𑌮𑌕𑍁𑌟𑌮-
𑌪𑍍𑌯𑌰𑍍𑌧𑍇𑌨𑍍𑌦𑍁𑌚𑍂𑌡𑌾𑌮𑌣𑌿𑌂
𑌨𑌾𑌸𑌾𑌮𑍌𑌕𑍍𑌤𑌿𑌕𑌮𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌯𑌕𑌟𑌕𑍌 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌮𑌪𑌿 𑌸𑍍𑌵𑍀𑌕𑍁𑌰𑍁 ॥ ௬

(இ - ள்.) அன்னங்களுந் கண்டு ஆசைகொள்ளுந்தகைய அழகிய நடையாளே! ஒளிபொருந்திய முத்துமாலையும், (ஊஞ் சலினசைவுபோல) சுடர் விட்டு விட்டெறிக்கும் வயிர ரத்தினங்கள் மிக அழுத்திப் பொன்னாற் செய்த தோளணி

யிரண்டும், இருகைவளையும், இரு பாதச்சிலம்பும், இரத்தின குண்டல மிரண்டும், பாதிச்சந்திரன் சூடபெற்ற முடியும், மூக்கணி முத்தும், மோதிரமும், இருகடகங்களும், காஞ்சியும் (என்னும் இப்பூஷணங்களை, தாயே!) ஏற்றருள்வாயாக. (எ - று.)

காஞ்சி என் கோவை மணி; அது மகளிர் இடையிலணிவது. மேகலை யெனினுமாம். அங்கதம்—தோளணி, வாகுவலயம்.

(த - சே.)

6. ஹ (அ) ஞ்சமு நயந்து பயிலுமென் னடையாய்! ஏற்றருள் ஆரமுஞ் சுடர்விட்
டெஞ்சலின் எறிக்கும் வச்சிர மலிந்த ஒண்பொனி னங்கதம் கடகம்
எஞ்சலில் சிலம்பும் ஆதனக் குழையும் இளமதி புனைமணி முடியும்
கஞ்சமென் கரத்தங் குலியமுங் காஞ்சி கங்கணம் மூக்கணி யிவையே.

सर्वाङ्गे घनसारकुङ्कुमघनश्रीगन्धपङ्काङ्कितं
कस्तूरीतिलकं च फालफलके गोरोचनापत्रकम् ।
गण्डादर्शनमण्डले नयनयोर्दिव्याञ्जनं तेऽञ्चितं
कण्ठाब्जे मृगनाभिपङ्कममलं त्वत्प्रीतये कल्पताम् ॥ ७ ॥

ஸர்வாங்கே கநஸாரகுங்குமகநஸ்ரீகந்தபங்காங்கிதம்
கஸ்தூரீதிலகம் ச பாலபலகே கோரோசநாபத்ரகம் ।
கண்டாதர்சநமண்டலே நயநயோர்திவ்யாஞ்ஜநம் தேऽஞ்சிதம்
கண்டாப்ஜே ம்ருகநாபிபங்கமமலம் த்வத்ப்ரீதயே கல்பதாம் ॥ எ

(இ - ள்.) அங்கமெங்கும் பூசுதற்காகக் கர்ப்பூரங் குங்குமம் மிக்க சந்தனம் என்பவை கலந்த கலவைச் சாந்தும், நெற்றியில் அணிதற்கு கஸ்தூரித்திலகமும் ஒளிபொருந்திய கபோலத்தலத்தில் சித்திரக்கோலம் எழுதுங் கோரோசனைக்

குழம்பும், இருகண்களுக்குந் தீட்டுதற்கு மேன்மை பொருந்திய அஞ்சனமும், தாமரை மலர் போன்ற கழுத்திலணிவதற்குப் புனிதமாகிய கஸ்தூரிக் குழம்பும் (ஹே தாயே!) நினக்கு மகிழ்வைத் தருவன வாகுக. (எ - ற.)

(த - சே.)

7. சரு (ர்) வமா மங்கஞ் சாத்துகர்ப் பூர சந்தன குங்குமக் குழம்பும்
உருவமார் நுதற்காந் திலகமான் மதமும் ஒளிர்கபோ லத்தலத் திலையும்
பருவமார் கோரோ சனைத்தொயிற் கூட்டும் பரவரி விழிகட்கஞ் சனமும்
மருவமர் கமலக் களத்தினுக் கமல மான்மதச் சேறுமேற் றருளே.

தொயில் தொகுத்தல் விகாரம். தொய்யில்—எழுதுங் குழம்பு; மகளிர் கன்னம் தோள் முதலியவற்றிற் சாந்து முதலியவற்றால் எழுதுங் கோலம்.

कल्हारोत्पलमल्लिकामरुवकैः सौवर्णपङ्केरुहै-
र्जातीचम्पकमालतीवकुलकैर्मन्दारकुन्दादिभिः ।
केतक्या करवीरकैर्बहुविधैः क्लृप्ता स्रजो मालिकाः
सङ्कल्पेन समर्पयामि वरदे संतुष्टये गृह्यताम् ॥ ८ ॥

கஹ்லாரோத்பலமல்லிகாமருவகை:
ஸௌவர்ணபங்கேருஹை-
ர்ஜாதீசம்பகமாலதீவகுலகைர்மந்தாரகுந்தாதிபி: ।
கேதக்யா கரவீரகைர்பஹுவிதை:
க்லுப்தா: ஸ்ரஜோ மாலிகா:
ஸங்கல்பேந ஸமர்ப்பயாமி வரதே
ஸந்துஷ்டயே க்ருஹ்யதாம் ॥ அ

(இ - ள்.) செங்கழுநீர், கருங்குவளை, மல்லிகை, மருக்கொழுந்து, பொற்றாமரை, ஜாதி, சண்பகம், சிறுசண்பகம், மகிழ், மந்தாரம், முல்லை, தாழை, அலரி என்னும் வெகுவிதமாகிய மலர்களால் தொடுக்கப்பட்ட தலைக்கணிமாலையும் கழுத்தணிமாலையும் மானஸிகமாக யான் சமர்ப்பிக்கின்றேன், வரந்தருபவளே! அவற்றை மகிழ்ந்து ஏற்றருள்வாயாக. (எ - று.)

தாழம்பூ சிவனுக்கு உவப்பாகிய மலரன்றாயினும், சராசரமாகிய எவ்வுயிர்க்குந் தாயாதலின் சிவனுக்கு அதன்பால் எழுந்த கோபத்தை மாற்றி அதனை ஏற்று அணிந்து கொள்வாள் என்னுங் குறிப்புத்தோன்றத் தாழை மலருந் தேவிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. ஆசாரிய ஸ்வாமிகள்,

"वैरमुद्धतमपास्य शंभुना......कैतकीकुसुममर्पयामि ते ॥"

(த்ரிபுரசுந்தரிமானஸ, பூ. 160.)

என இதனை வேறிடத்துங் கூறுவர்.

(த - சே.)

8. கல்லகா ரமதோ டுற்பல மௌவல் கவினுமல் லிகைமருக் கொழுந்து
மல்லலங் கனகத் தாமரை சாதி சண்பகம் மாலதி வகுளம்
அல்லிமந் தாரம் கேதகி யலரி யாதியாம் விதங்கெழு மலர்கள்
புல்லல்செய் மாலை வகைபல வரதே புந்தியாற் றொடுத்தகொள் மகிழ்ந்தே.

கல்லாரம், என்பது கல்லகாரம் எனவும் வழங்கும்; அது செங்கழுநீர். உற்பலம் நீலோற்பலம். மௌவல் முல்லை.

हन्तारं मदनस्य नन्दयसि यैरङ्गैरनङ्गोज्ज्वलै-
यैर्भृङ्गावलिनीलकुन्तलभरैर्बध्नासि तस्याशयम् ।
तानीमानि तवाम्ब कोमलतराण्यामोदलीलागृहा-
ण्यामोदाय दशाङ्गगुग्गुलुघृतैर्धूपैरहं धूपये ॥ ९ ॥

𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌂 𑌮𑌦𑌨𑌸𑍍𑌯 𑌨𑌨𑍍𑌦𑌯𑌸𑌿 𑌯𑍈𑌰𑌙𑍍𑌗𑍈𑌰𑌨𑌙𑍍𑌗𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑍈-
𑌯𑍈𑌰𑍍𑌭𑍃𑌙𑍍𑌗𑌾𑌵𑌲𑌿𑌨𑍀𑌲𑌕𑍁𑌨𑍍𑌤𑌲𑌭𑌰𑍈𑌰𑍍𑌬𑌧𑍍𑌨𑌾𑌸𑌿 𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑌯𑌮𑍍 ।

தாநீஶாநி தவாஃ கொஶெடதாராண்யாஜொஶாஉடீஶாஜ்ரூஹா-
ண்யாஜொஶாஉாய உஶாஜூரூமாவ்யூஜெதெ-
யடீஸுஜெவொாஹம் யஸுவமெ ॥ கூ

(இ-ள்.) உவகையாற் பொலிவடைந்து பிரகாசிக்கின்ற எந்த உனது அங்கங்களினல், மன்மதனை யழிவு செய்த சிவ பெருமானை மகிழ்ச்சியுறுவிக்கின்ருயோ! வண்டினம் மொய்க்கும் எந்தக் கரிய அளகபாரத்தினல் அவனது இதயத்தையுங் கட்டு கின்ருயோ!, அம்மையே! அத்தகைய அந்தப் பேரழகுவாய்ந்த மகிழ்ச்சி விளையாட்டுக்கு இருப்பிடமாகிய நினதங்கங்கள் மிகு மணமுறும்படி தசாங்கம், குங்குலியம் நெய் என்பவற்ருல் தூபம் இடுகின்றேன். (எ-று.)

(த-சே.)

9. ஹ(அ) தமுற மதனை விழித்தவன் றன்னை அன்பினிற் பொலிவுறுன்னங்கம்
இதமுறச் செய்வ சுரும்பினஞ் சூழுன் எழிற்கனங் குழற்பா மவன்றன்
இதயமும் பிணிப்ப அத்தகைச் செவ்வி எமவைப் பாமவை அன்னே!
முதமுறத் தசாங்கங் குக்குலு நறுநெய் முதலிய தூபநேர் குவனே.

எமம்—மகிழ்ச்சி, மதர்ப்பு. முதம்—மகிழ்ச்சி. குக்குலு—குங்கிலியம்.

लक्ष्मीमुज्ज्वलयामि रत्ननिवहोद्भास्वत्तरे मन्दिरे
मालारूपविलम्बितैर्मणिमयस्तम्भेषु संभावितैः ।
चित्रैर्हाटकपुत्रिकाकरधृतैर्गव्यैर्घृतैर्वर्धितै-
र्दिव्यैर्दीपगणैर्धिया गिरिसुते सन्तुष्टये कल्पताम् ॥ १० ॥

லக்ஷ்மீமுஜ்ஜ்வலயாமி ரத்நநிவஹோத்பாஸ்வத்தரே மந்திரே
மாலாரூபவிலம்பிதைர்மணிமயஸ்தம்பேஷு ஸம்பாவிதை: ।

𑌚𑌿𑌤𑍍𑌰𑍈𑌰𑍍𑌹𑌾𑌟𑌕𑌪𑍁𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌕𑌰𑌧𑍃𑌤𑍈-
𑌰𑍍𑌗𑌵𑍍𑌯𑍈𑌰𑍍𑌘𑍃𑌤𑍈𑌰𑍍𑌵𑌰𑍍𑌧𑌿𑌤𑍈-
𑌰𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑍈𑌰𑍍𑌦𑍀𑌪𑌗𑌣𑍈𑌰𑍍𑌧𑌿𑌯𑌾 𑌗𑌿𑌰𑌿𑌸𑍁𑌤𑍇
𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑍇 𑌕𑌲𑍍𑌪𑌤𑌾𑌂 ॥ ௰

(இ - ள்.) இரத்தினத்திரள்களினல் ஒளிமிக்குப் பிரகாசிக்கின்ற நினது ஆலயத்தில், மணிமயமான தூண்களிற் றொங்கும் மாலை (சர) விளக்குகளும், தகுதிவாய்ந்த சித்திர விளக்குகளும், பொற்பதுமை கையிலேந்தும் பாவை விளக்குகளும் என்று இன்ன பல பிரகாசமான தீபங்கள் பசு நெய் நிறைத்து மானஸிகமாக ஏற்றி இலக்ஷ்மி விளங்கும்படி செய்வேன்; ஹே இமாசலபுத்திரியே! அவை நினக்கு மகிழ்ச்சியைத் தருவனவாகுக. (எ - று.)

(த - செ.)

10. லக்குமி விளங்கச் செய்குவன் மனத்தால் இனமணி யெறிக்குமாலயத்தில்
தொக்கநன் மணிக்கால் தூங்குறும் விளக்குஞ் சொலத்தகு சித்திர விளக்கும்
மிக்கபொற் பதுமைக் கரத்தொளிர் பாவை விளக்குமென் றினைப் பல தீபம்
தக்கவான் நெய்கொ டேற்றினன் இமயத் தநயை! நீ உவந்து கொண்டருளே.

ह्रींकारेश्वरि तप्तहाटककृतैः स्थालीसहस्रैर्भृतं
दिव्यान्नं घृतसूपशाकभरितं चित्रान्नभेदं तथा ।
दुग्धान्नं मधुशर्करादधियुतं माणिक्यपात्रे स्थितं
माषापूपसहस्रमम्ब सफलं नैवेद्यमावेदये ॥ ११ ॥

𑌹𑍍𑌰𑍀𑌙𑍍𑌕𑌾𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌿 𑌤𑌪𑍍𑌤𑌹𑌾𑌟𑌕𑌕𑍃𑌤𑍈𑌃
  𑌸𑍍𑌥𑌾𑌲𑍀𑌸𑌹𑌸𑍍𑌰𑍈𑌰𑍍𑌭𑍃𑌤𑌂
𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌂 𑌘𑍃𑌤𑌸𑍂𑌪𑌶𑌾𑌕𑌭𑌰𑌿𑌤𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌨𑌭𑍇𑌦𑌂 𑌤𑌥𑌾।
𑌦𑍁𑌗𑍍𑌧𑌾𑌨𑍍𑌨𑌂 𑌮𑌧𑍁𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌦𑌧𑌿𑌯𑍁𑌤𑌂 𑌮𑌾𑌣𑌿𑌕𑍍𑌯𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂
𑌮𑌾𑌷𑌾𑌪𑍂𑌪𑌸𑌹𑌸𑍍𑌰𑌮𑌮𑍍𑌬 𑌸𑌫𑌲𑌂
  𑌨𑍈𑌵𑍇𑌦𑍍𑌯𑌮𑌾𑌵𑍇𑌦𑌯𑍇 ॥ ௧௧

(இ - ள்.) ஹ்ரீம் என்னும் அக்ஷரத்தின் முதல்வியே! ஓட்டவைத்த பசும் பொன்னாற்செய்த பல பாத்திரங்களிற் படைத்த சுத்தான்னமும், அதனோடு நெய் பருப்பு கறிவர்க்கம் என்பனவும், பலவித சித்திரான்னங்களும், மாணிக்க பாத்திரத்தில் படைத்த பாலன்னமும், தேன் சருக்கரை தயிர் என்பனவும், அநேக வடைகளும், கனிகளும், அம்மையே! உனக்கு நிவேதனஞ் செய்கின்றேன். (எ - று.)

பாலன்னம் என்பது பாயசம்.

(த - செ.)

11. ஹ்ரீம்மனு முதல்வி! அபராஞ்சி யதனின் இயன்றபல் கலங்களிற் படைத்த
தோமறு சுத்தான் னத்தொடு நெய்யும் சூபவெஞ் சனங்களும் வகைய
வாமறு சுவையோ தனங்களும் பாலி னன்னமும் பாகுதேன் தயிரும்
மாமணிக் கலத்திற் படைத்துநற் கனியும் வடைகளு நிவேதிப்ப னம்மே!

அபராஞ்சி—உருக்கி ஓட்டவைத்த பொன். சூபம்—பருப்பு. வெஞ்சனம்—கறிபதார்த்தம்; வ்யஞ்சனம் என்னும் வடசொல் வெஞ்சனம் என்றாயிற்று. பாகு—சருக்கரை.

सच्छायैर्वरकेतकीदलरुचा ताम्बूलवल्लीदलैः
पूगैर्भूरिगुणैः सुगन्धिमधुरैः कर्पूरखण्डोज्ज्वलैः ।

मुक्ताचूर्णविराजितैर्बहुविधैर्वक्त्राम्बुजामोदितैः
पूर्णा रत्नकलाचिका तव मुदे न्यस्ता पुरस्तादुमे ॥ १२ ॥

ஸச்சாயைர்வரகேதகீதளருசா தாம்பூலவல்லீதளை:
பூகைர்பஹுகுணை: ஸுகந்திமதுரை:
கர்பூரகண்டோஜ்ஜ்வலை: ।
முக்தாசூர்ணவிராஜிதைர்பஹுவிதை-
ர்வக்த்ராம்புஜாமோதிதை:
பூர்ணா ரத்னகலாசிகா தவ முதே
ந்யஸ்தா புரஸ்தாதுமே ॥ ௧௨

(இ - ள்.) மேன்மை பொருந்திய தாழை யிலையின் நிறம் பொருந்தி நல்லகாந்தியையுடைய வெற்றிலையும், வெகு குணம் படைத்து நறுமணமும் சுவையுமுடைய பாக்கும், வெள்ளிய கர்ப்பூரத்துண்டுகளும், ஒளிவிளங்கும் முத்தின் சுண்ணமும், மலர் போன்ற முகத்திற்கு இன்பமும் மணமுஞ் செய்கின்ற பல வகை வாசனைத்திரவியங்களுஞ் சேர்த்து இரத்தினக் காளாஞ்சியில் நிறைத்து நீ மகிழ்ச்சி யடையும்படி, உமையம்மையே! நின் திருமுன்பு வைக்கின்றேன். (எ - று.)

(த - செ.)

12. சந்தமார் தாழை யிளந்தளிர் நிறத்தாம் பூலியும் வெகுகுண முறுநற்
கந்தமார் மதுரப் பாகுங்கர்ப் பூர கண்டமுங் கவினுற முத்தின்
வந்தவால் நீறும் ஒளிதர வதன மலர்மண முறநறும் பொருளும்
சிந்தையால் மணிக்கா ளாஞ்சியில் நிறைத்துன் றிருமுன்பு சேர்த்
தவ னுமையே!

சந்தம்—அழகு. தாம்பூலி—வெற்றிலே. பாகு—பாக்கு. நறும் பொருள் என்றது முகவாசத்தை; அவை தக்கோலம் முதலிய ஐந்து.

कन्याभिः कमनीयकान्तिभिरलङ्कारामलारार्तिका
पात्रे मौक्तिकचित्रपङ्क्तिविलसत्कर्पूरदीपालिभिः ।
तत्तत्तालमृदङ्गगीतसहितं नृत्यत्पदाम्भोरुहं
मन्त्राराधनपूर्वकं सुनिहितं नीराजनं गृह्यताम् ॥ १३ ॥

கந்யாபி: கமநீயகாந்திபிரலங்காராமலாரார்த்திகா
பாத்ரே மௌக்திகசித்ரபங்க்திவிலஸத்கர்பூரதீபாலிபி: ।
தத்தத்தாலம்ருதங்ககீதஸஹிதம் ந்ருத்யத்பதாம்போருஹம்
மந்த்ராராதநபூர்வகம் ஸுநிஹிதம்
நீராஜநம் க்ருஹ்யதாம் ॥ ௧௩

(இ - ள்.) விரும்பத்தகுந்த அழகுவாய்ந்த கன்னியர் அலங்காரமான மங்கல ஆலத்தித்தட்டில் முத்துநிரை பதித்த சித்திரக்கோலம் விளங்கக் கர்ப்பூரத்தை வரிசையாயேற்றி, அந்த அந்த நடனத்துக்கேற்ற தாளம் மிருதங்கம் கீதம் என்பவை சேர லயத்தோடு மென்மையாகிய அடிகளை வைத்து நடித்து, மந்திரங்களையோதி வழிபாட்டுடனே நன்கு சுற்றிக் காட்டுவதாகிய நீராஞ்சனத்தை (அம்மையே!) ஏற்றருள்வாயாக. (எ - று.)

(த - செ.)

13. கன்னியர் வனப்பிற் காமுறுந் தகையர் கவினுமங் கலவா ரத்தி
தன்னிய முத்து நிரைபுனை தட்டிற் சுடர்கொள்கர்ப் பூரமுங் கொளுவி
இன்னியற் ருள் மத்தளங் கீதம் இசைவுறப் பயில்நடத் தடனே
மன்னிய நீராஞ் சனம்மறை யோதி வழங்குவ தவந்துகொண் டருளே.

लक्ष्मीमौक्तिकलक्षकल्पितसितच्छत्रं तु धत्ते रसा-
दिन्द्राणी च रतिश्च चामरवरे धत्ते स्वयं भारती ।
वीणामेणविलोचनाः सुमनसां नृत्यन्ति तद्रागव-
द्भावैराङ्गिकसात्त्विकैः स्फुटरसं मातस्तदाकर्ण्यताम् ॥ १४ ॥

𑌲𑌕𑍍𑌷𑍀𑌮𑍌𑌕𑍍𑌤𑌿𑌕𑌲𑌕𑍍𑌷𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌿𑌤𑌚𑍍𑌛𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌧𑌤𑍍𑌤𑍇 𑌰𑌸𑌾-
𑌦𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑍀 𑌚 𑌰𑌤𑌿𑌶𑍍𑌚 𑌚𑌾𑌮𑌰𑌵𑌰𑍇 𑌧𑌤𑍍𑌤𑍇 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌭𑌾𑌰𑌤𑍀 ।
𑌵𑍀𑌣𑌾𑌮𑍇𑌣𑌵𑌿𑌲𑍋𑌚𑌨𑌾𑌃 𑌸𑍁𑌮𑌨𑌸𑌾𑌂 𑌨𑍃𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌦𑍍𑌰𑌾𑌗𑌵-
𑌦𑍍𑌭𑌾𑌵𑍈𑌰𑌾𑌙𑍍𑌗𑌿𑌕𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍈𑌃 𑌸𑍍𑌫𑍁𑌟𑌰𑌸𑌂
𑌮𑌾𑌤𑌸𑍍𑌤𑌦𑌾𑌕𑌰𑍍𑌣𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ॥ கச

(இ - ள்.) இலக்ஷம் முத்துக்களாற் புனையப்பெற்ற வெள்ளைக்குடையை இலக்குமி பிடிப்பள், விருப்பத்தினால் இந்திராணியும் இரதியும் மேலான இரட்டைச் சாமரை வீசுவர், சரஸ்வதி தனது வீணையைக் கரத்திலேந்தி வாசிப்பள், அமரர்மாதர் அந்த அந்த ராகங்களது பாவமும் மெய்ப்பாடுங் காட்டிச் சுவை நன்கு தோன்றும்படி நடனஞ் செய்வர், அன்னையே! அவற்றை மகிழ்ந்து காண்பாயாக. (எ - று.)

(த - சே.)

14. லக்குமி யிலகு தாளவெண் கவிகை யேந்துவள் சசிரதி யென்போர்
தொக்கபொற் கவரி யிரட்டுவர் பரிவாற் சொற்கலை வாணிகைப் பரித்தி
யக்குறும் வீணை இசைப்படு குறிப்பால் இயலுமெய்ப் பாட்டினு லிரச
மிக்குற நிருத்தம் அரம்பையர் புரிவர் வியந்திவை கண்டருள் அம்மே!

ह्रींकारत्रयसंपुटेन मनुनोपास्ये त्रयीमौलिभि-
र्वाक्यैर्लक्ष्यतनो तव स्तुतिविधौ को वा क्षमेताम्बिके ।

सल्लापाः स्तुतयः प्रदक्षिणशतं सञ्चार एवास्तु ते
संवेशो मनसः सहस्रमखिलं त्वत्प्रीतये कल्पताम् ॥ १५ ॥

ஹ்ரீங்கார த்ரயஸம்புடேந மநுநோபாஸ்யே
த்ரயீமௌலிபி:
வாக்யைர்லக்ஷ்யதநோ தவ ஸ்துதிவிதௌ
கோ வா க்ஷமேதாம்பிகே ।
ஸல்லாபா: ஸ்துதய: ப்ரதக்ஷிணசதம் ஸஞ்சார ஏவாஸ்து தே
ஸம்வேசோ மநஸ: ஸஹஸ்ரமகிலம்
த்வத்ப்ரீதயே கல்பதாம் ॥ ௧௫

(இ - ள்.) ஹ்ரீம் அக்ஷரம் மூன்றைத் தன்னுள் அடக்கியிருக்கும் மந்திரத்தினல் உபாசிக்கத்தக்கவளே! வேத சிரசாகிய உபநிடத வாக்கியங்களது வாச்சிய ரூபமானவளே! உன்னை அறிந்து தக்கவாறு உன்னைத் துதித்தற்குச் சமர்த்தராவார் யாவர்? யான் பேசுவன எல்லாம் நினது துதியும், சஞ்சரித்தல் உன்னை நூறுதரம் வலம் வருதலும் ஆகுக; மனத்து நிகழும் ஆயிரம் தூக்கமும் ஆகிய எல்லாம் (அம்மையே!) நினக்குப் பிரீதி யாகுக. (எ - று.)

(த - சே.)

15. ஹ்ரீமெனு மொருமூன் றியையுமந் திரத்தால் தொழத்தகும் இறைவி! தொன்மறையீ
றுமெனு முபநி டதப்பொருள் வடிவி! ஆருனைத் துதிசெயுந் தகையோர்
நாமனு தினஞ்செய் பேச்சுநிற் றுதித்தல் நடத்தலு முனைவலம் வருதல்
ஆமன நிகழு மாயிரங் கனவும் அம்மை! நிற் குவந்தவா குகவே.

श्रीमन्त्राक्षरमालया गिरिसुतां यः पूजयेच्चेतसा
सन्ध्यासु प्रतिवासरं सुनियतस्तस्यामलं स्यान्मनः ।
चित्ताम्भोरुहमण्डपे गिरिसुता नृत्तं विधत्ते रसा-
द्वाणी वक्त्रसरोरुहे जलधिजा गेहे जगन्मङ्गला ॥ १६ ॥

ஸ்ரீமந்த்ராக்ஷரமாலயா கிரிஸுதாம் ய: பூஜயேச்சேதஸா
ஸந்த்யாஸு ப்ரதிவாஸரம் ஸுநியதஸ்தஸ்யாமலம் ஸ்யாந்மந:।
சித்தாம்போருஹமண்டபே கிரிஸுதா ந்ருத்தம் விதத்தே ரஸா-
த்வாணீ வக்த்ரஸரோருஹே ஜலதிஜா கேஹே ஜகந்மங்களா ॥

(இ - ள்.) ஸ்ரீவித்யா மந்திரத்துள்ள அக்ஷரவரிசையாகத் தொடுக்கப்பட்ட இந்தப் புஷ்ப மாலிகா ஸ்தவத்தினல் மானஸிகமாக நாடோறும் மூன்று சந்தியிலும் இமாசல புத்திரியாகிய அம்பிகையை நியமத்தோடு, எவர் பூசிக்கின்றனரோ அவருக்குச் சித்த சுத்தி உண்டாகும்; அவரது இதய கமலமாகிய மண்டபத்தில் பார்வதியம்மை நயப்புடன் நடனமாடுவள்; அவரது நாவில் சரஸ்வதி நடிப்பாள்; சகலசெல்வ சம்பத்துக்களையுங் கொடுப்பவளாகிய இலக்குமி அவர் மனையில் நீங்காது நிருத்தஞ் செய்திருப்பாள். (எ - று.)

ஸ்தவம்—துதி. இத்துதி இம்மை மறுமையாகிய இருவகைப் பயனையுங் கொடுப்பது என்பதாம்.

(த - சே.)

16. ஸ்ரீவரு மனுவா ரக்கர மாலை இமயமா மகடனக் கணிந்து
தாவரு நியமத் தனுதின மனத்தாற் சாருமுப் போதும்பூ சிப்போர்
மேவரு மனந்துய் தாமுளக் கமல வீட்டினி லுமைநடம் புரியும்
நாவருங் கலையின் செல்விசெங் கமலை நண்ணுமாங் கவர்மனை
நயந்தே.

इति गिरिवरपुत्रीपादराजीवभूषा
भुवनममलयन्ती सूक्तिसौरभ्यसारैः ।
शिवपदमकरन्दस्यन्दिनीयं निबद्धा
मदयतु कविभृङ्गान् मातृकापुष्पमाला ॥ १७ ॥

𑌇𑌤𑌿 𑌗𑌿𑌰𑌿𑌵𑌰𑌪𑍁𑌤𑍍𑌰𑍀𑌪𑌾𑌦𑌰𑌾𑌜𑍀𑌵𑌭𑍂𑌷𑌾
𑌭𑍁𑌵𑌨𑌮𑌮𑌲𑌯𑌨𑍍𑌤𑍀 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌸𑍌𑌰𑌭𑍍𑌯𑌸𑌾𑌰𑍈𑌃 ।
𑌶𑌿𑌵𑌪𑌦𑌮𑌕𑌰𑌨𑍍𑌦𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑍀𑌯𑌂 𑌨𑌿𑌬𑌦𑍍𑌧𑌾
𑌮𑌦𑌯𑌤𑍁 𑌕𑌵𑌿𑌭𑍃𑌙𑍍𑌗𑌾𑌨𑍍 𑌮𑌾𑌤𑍃𑌕𑌾𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑌾𑌲𑌾 ॥ ௧௭

(இ - ள்.) இவ்வாறு பர்வத ராஜகுமாரியாகிய பார்வதி தேவியின் திருப்பாத கமலங்களுக்கு அணியாய், நல்லுரையாகிய நறுமணத்தாலும் தேனினாலும் உலகத்தைப் பரிசுத்தஞ் செய்வதாய், சிவபதமாகிய மகரந்தத்தைச் சொரிவதாய்த் தொடுக்கப்பட்டுள்ள இந்த மந்திராட்சர மலர்மாலை (த்துதி), கவிகளாகிய வண்டுகளைக் களிப்பூட்டுவதாக. (எ - று.)

வேறு.

(த - சே.)

17. இன்ன வாறிம வான்மகள் பதமலர்க் கணியாய்த்
துன்னு நல்லுரை நறையினால் தூய்மைசெய் துலகைப்
பன்னு நற்சிவ பதமக ரந்தமுன் இறைத்து
மன்னு மந்திர மாலிகை களிகவி யளிக்கே.

மந்திர மாத்ருகா புஷ்ப மாலா ஸ்தவம்

முற்றிற்று.

தேவி துணை.

॥ श्रीमहात्रिपुरसुन्दर्यै नमः ॥

உ

॥ श्रीगौर्यम्बायै नमः ॥

॥ गौरीदशकम् ॥

கௌரீ தசகம்

என்னும்

கௌரிப் பத்து

लीलालब्धस्थापितलुप्ताखिललोकां
लोकातीतैर्योगिभिरन्तश्चिरमृग्याम् ।
बालादित्यश्रेणिसमानद्युतिपुञ्जां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ १ ॥

𑌲𑍀𑌲𑌾𑌲𑌬𑍍𑌧𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌲𑍁𑌪𑍍𑌤𑌾𑌖𑌿𑌲𑌲𑍋𑌕𑌾𑌂
𑌲𑍋𑌕𑌾𑌤𑍀𑌤𑍈𑌰𑍍𑌯𑍋𑌗𑌿𑌭𑌿𑌰𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌿𑌰𑌮𑍃𑌗𑍍𑌯𑌾𑌮𑍍 ।
𑌬𑌾𑌲𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌶𑍍𑌰𑍇𑌣𑌿𑌸𑌮𑌾𑌨𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌪𑍁𑌞𑍍𑌜𑌾𑌂
𑌗𑍌𑌰𑍀𑌮𑌮𑍍𑌬𑌾𑌮𑌮𑍍𑌬𑍁𑌰𑍁𑌹𑌾𑌕𑍍𑌷𑍀𑌮𑌹𑌮𑍀𑌡𑍇 ॥ க

(இ - ள்.) உலகத்தைப் படைத்தல் காத்தல் அழித்தலை விளையாட்டாகச் செய்பவளும், உலகப்பற்று நீங்கிய யோகியர் மனத்தில் நீளநினைந்து தேடப்படுபவளும், அநேக சூரியர்கள் ஒருங்கு உதித்தாற் போன்ற சோதிப் பிழம்பானவளும், கமலம் போன்ற திருக்கண்களையுடையவளுமாகிய கௌரி அம்மையை யான் ஏத்துகின்றேன். (எ - று.)

பிரபஞ்ச சிருட்டி முதலிய கிருத்தியம் ஈசுவர சக்தியின் லீலாமாத்திரையாகவே நிகழ்வதென்பதை,

"......இவ்வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி,"

எனவும், (திருவாசகம்)

"உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலும் நீக்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணங்களே"

(கம். ராமாயணம்)

எனவும் வருவன வற்றானுமறியலாம்.

(த - சே.)

1. உலகனைத்து முளவாக்கி நிலைபெறுத்தி யொடுக்கிவிளை யாடல் செய்வாள்
உலகிறந்த போகியர்த முள்ளமதி லோவாது நேட நின்றாள்,
அலகிவிள ஞாயிறென்று யுதித்ததென அவிர்சோதிப் பிழம்பதாவாள்
இலகுவிழி கமலமலர் மானுமம்மை கௌரியையான் இறைஞ்சுகேனே.

आशापाशक्लेशविनाशं विदधानां
पादाम्भोजध्यानपराणां पुरुषाणाम् ।
ईशामीशार्धाङ्गहरां तामभिरामां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ २ ॥

ஆஶாபாஶக்லேஶவிநாஶம் விதயாநாம்
பாதாம்போஜத்யாநபராணாம் புருஷாணாம் ।
ஈஶாமீஶார்தாங்கஹராம் தாமபிராமாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ உ

(இ - ள்.) தனது திருப்பாத கமலங்களைத் தியானஞ் செய்தலி லழுந்தியிருக்கும் அடியார்களுக்கு ஆசாபந்தத்தினல்

வருந் துன்பங்களை அழிவு செய்பவளும், உலகநாயகியும், நாயக னுடலிற்பாதியைக் கவர்ந்து கொண்டவளும், மிக்க அழகு வாய்ந்தவளும், கமலம் போன்ற திருக்கண்களை யுடையவளும் ஆகிய கௌரி அம்மையை யான் ஏத்துகின்றேன். (எ - று.)

மெய்யுணர்வு பெற்றுப் புலன்களைத் துறந்து தவநெறியில் நின்றார்க்கும், உடம்போடு கூடிய வினைப்பயன்கள் நிற்பதால், பழைய பயிற்சி வயத்தால் அவர்க்கு ஓரோவழிப் புலன்களில் நினைவு சென்று மேலும் பிறவித் துன்பத்துக்குக் காரணமாகு மாதலின், மெய்ப்பொருளாகிய தன்னை உணர்ந்து தனது தியானத்தில் இடைவிடாது பற்றுவைத்த அன்பர்களுக்கு, அவ்வித அவாவினால் வருந் துன்பங்களை அருட்சத்தியாகிய அம்மை நீக்கியருள்வாள் என்பதாம்.

அவாவே பிறவித்துன்பத்திற்குக் காரணம் என்பதனை,

"அவாவென்ப தெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து" (குறள், 361)

என்பதனாலும் அறியலாம்.

(த - சே.)

2. பாதமலர் மனத்திருத்திப் பரவுதியா னத்தகலாப் பண்பி னோர்க்கு
வாதனைசெ யவாத்தளையின் வருதுயர மாய்த்தருள் வாளுலகம் யாவும்
ஏதமற ஆளிறைவி யிறைவனுடற் பாதிகொண்டாள் எழிலான் மிக்காள்
காதமரும் விழிகமல மானுமம்மை கௌரியையான் இறைஞ்சு கேனே.

नानाकारैः शक्तिकदम्बैर्भुवनानि
व्याप्य स्वैरं क्रीडति येयं स्वयमेका ।
कल्याणीं तां कल्पलतामानतिभाजां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ३ ॥

𑌨𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑍈𑌃 𑌶𑌕𑍍𑌤𑌿𑌕𑌦𑌮𑍍𑌬𑍈𑌰𑍍𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑌿
𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌸𑍍𑌵𑍈𑌰𑌂 𑌕𑍍𑌰𑍀𑌡𑌤𑌿 𑌯𑍇𑌯𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌕𑌾 ।
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍀𑌂 𑌤𑌾𑌂 𑌕𑌲𑍍𑌪𑌲𑌤𑌾𑌮𑌾𑌨𑌤𑌿𑌭𑌾𑌜𑌾𑌂
𑌗𑍌𑌰𑍀𑌮𑌮𑍍𑌬𑌾𑌮𑌮𑍍𑌬𑍁𑌰𑍁𑌹𑌾𑌕𑍍𑌷𑍀𑌮𑌹𑌮𑍀𑌡𑍇 ॥ ௩

(இ - ள்.) நாநாவிதமாகிய சக்திகளின் கூட்டத்தினுல் உலகமெவற்றிலுங் கலந்து வியாபித்து நிற்பினும் தானே ஏகமாய்ச் சுயமே விளையாடாநிற்பவளும், மங்கள வடிவான வளும், வணங்கும் அடியார்க்கு (வேண்டிய செல்வங்களை யெல்லாம் வழங்கும்) கற்பகக்கொடி போன்றவளும், கமலம் போன்ற திருக்கண்களை யுடையவளுமாகிய கௌரி அம்மையைப் போற்றுகின்றேன். (எ - று.)

மாயாகாரியப்படுத்தி உலகத்தை நடத்துஞ் சிவசத்தியாகிய பராசத்தி காரிய வேறுபாட்டாற் பலப்பல சத்தி பேதங்களாகி விரிந்து பிரபஞ்ச கிருத்தியத்தை நடாத்தும் எனினும், தான் அவற்றின் வேருய்ச் சர்வவியாபியாகிய சைதன்ய ரூபமாய் ஏகமாய் நிற்பள் என்றவாரும். அது அரசன் ஒருவனது ஆணையே அவன் கீழுமுள்ள அமைச்சர் முதலிய பலரிடத் திலும் நின்று பலப்பல வேறுபாடாகிய பல தொழில்களை யாற்றுதல் போல என்க. இதனை,

"சத்திதான் பலவோ வென்னிற் றுனென்றே யநேகமாக
வைத்திடுங் காரியத்தான் மந்திரி யாதிக் கெல்லாம்
உய்த்திடு மொருவன் சத்தி போலர னுடைய தாகிப்
புத்திமுத் திகளை யெல்லாம் புரிந்தவ னினைந்த வாருய்"

என்னும் சிவஞான சித்திச் செய்யுளானும் அறியலாம்.

(த - சே.)

3\. பலவிதமாந் தனதுசத்தி கணஞ்செறித்தே பரந்தபுவ னங்க ளெல்லாங்
கலந்தணைத்து மாட்டுவித்துங் கலப்பின்றித் தானேயாய்க் கவித்து நிற்பாள்

நலமலியு மங்கலைதாள் வணங்குநர்க்கு நல்குகற்பக் கொடியே
யாவாள்
இலகுவிழி கமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சு
கேனே.

मूलाधारादुत्थितवीथ्या विधिरन्ध्रं
सौरं चान्द्रं व्याप्य विहारज्वलिताङ्गीम् ।
येयं सूक्ष्मात् सूक्ष्मतनुस्तां सुखरूपां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ४ ॥

𑌮𑍂𑌲𑌾𑌧𑌾𑌰𑌾𑌦𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌵𑍀𑌥𑍍𑌯𑌾 𑌵𑌿𑌧𑌿𑌰𑌨𑍍𑌧𑍍𑌰𑌂
𑌸𑍌𑌰𑌂 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌵𑌿𑌹𑌾𑌰𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑍀𑌮𑍍 ।
𑌯𑍇𑌯𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑌨𑍁𑌸𑍍𑌤𑌾𑌂 𑌸𑍁𑌖𑌰𑍂𑌪𑌾𑌂
𑌗𑍌𑌰𑍀𑌮𑌮𑍍𑌬𑌾𑌮𑌮𑍍𑌬𑍁𑌰𑍁𑌹𑌾𑌕𑍍𑌷𑍀𑌮𑌹𑌮𑍀𑌡𑍇 ॥ ௪

(இ - ள்.) மூலாதாரத்தினின்றும் எழுகின்ற சுழுமுனை வழியாய் சூரியமண்டலம் சந்திரமண்டலம் பிரமரந்திரம் என்பவற்றில் வியாபித்து விளையாடுகின்ற சோதி வடிவினளும், நுண்மையினும் நுண்மையாகிய திருமேனியுடையவளும், சுகரூபமானவளும், கமலம் போன்ற திருக்கண்களையுடையவளுமாகிய கௌரி அம்மையைப் போற்றுகின்றேன். (எ - று.)

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஜ்ஞை என உடம்பில் ஆறு ஆதாரங்களுண்டு. இவற்றிற்கு இடம், முறையே, குதம், குய்யம், நாபி, இதயம், கண்டம், புருவமத்தி என்பன. மேலும் இவை முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், மனம் என்னும் தத்துவங்களைச் சார்வன. மூலாதாரமும் சுவாதிட்டானமும் அக்கினி மண்டலமெனப்படும்; மணிபூரகம் அநாகதம் இரண்டும் சூரியமண்டலம் எனப்படும்; விசுத்தி ஆஜ்ஞை இரண்டும் சந்திர மண்டலம் எனப்படும். பிரமரந்திரம் விந்துஸ்தானம் எனப்படும். இதுவே சுத்தமாயை, குடிலை, குண்டலி எனவும்படும்.

சத்தியானவள் மூலாதாரத்திலிருந்து சுழுமுனை வழியாக மேலெழுந்து சூரியமண்டலத்தைக் கடந்து சதாசிவதத்துவத்திற்குமேல் சகஸ்ர கமலத்தி லிருக்கிற சந்திர மண்டலத்தில் அமிர்தமயமான வயிந்தவ ஸ்தானத்தில் பரமசிவத்தோடு கலந்து விளையாடுபவளாய்ப் பிரகாசிக்கிறுள் என்பதறிக.

இது குண்டலிசத்தி தானிருக்குந் தானம் விட்டுச் சென்று சிவசக்தி ஐக்கியமாமாறு கூறியதாம். இதனை அநுபூதியிற் கண்டு அறிவதே வீடுபேறென்ப.

இதனை,

"மூலமணி பூரகத்தோ டிலிங்க மார்பு
முதுகளம்விற் புருவநடு மொழிவ தாறு
ஞாலமுமென் புனலுமனற் பிழம்புங் காலு
நாதமுறு பெருவெளியு மனமு மாக
மேலனுகிக் குளபதத்தைப் பின்னிட் டப்பான்
மென்கமலத் தாயிரந்தோட் டருண பீடத்
தாலவிடம் பருகியதன் மகிழ்ந ரோடும்
ஆனந்த முறும்பொருளை யறிய லாமே."

எனவும், (சௌந்தரிய லகரி)

"ஆறு தாரத் தங்குச நிலையும்
போா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாடமுங் காட்டி
மூன்றுமண் டபத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி

....

....

கருத்தினிற் கபால வாயிலுங் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து.''

(ஔவையார்—விநாயகரகவல்)

எனவும் வருவன வற்றாலறியலாம்.

(த - சே.)

4. மூலமதி லெழுஞ்சுழுனை வழியாக முனநடந்து தபனற் றுண்டிச
சாலுமதி பதமேவி யமுதநிலை சார்ந்தாடல் புரியுந் தேவி
சாலவதி சூக்குமத்திற் சூக்குமமாந் தனுவடையான் சுகஞ்செய்
கிற்பாள்
எலுமரி விழிகமல மானுமம்மை கௌரியையா னிறைஞ்சு கேனே.

यस्यामोतं प्रोतमशेषं मणिमाला
सूत्रे यद्वत् क्वापि चरं चाप्यचरं च ।
तामध्यात्मज्ञानपद्व्या गमनीयां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ५ ॥

யஸ்யாமோதம் ப்ரோதமஶேஷம் மணிமாலா
ஸூத்ரே யத்வத் க்வாபி சரம் சாப்யசரம் ச ।
தாமத்யாத்மஜ்ஞாநபத்வ்யா கமநீயாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ ௫

(இ - ள்.) சரம் அசரமாகிய சகம் முழுதும் தன்னிடத்தில் மணிவடத்தில் (கோத்த) மணிகள் போல அந்தர்வியாப்பியமாய் விளங்கியிருக்கப் பெற்றவளும், (தன்னை யறிதலாகிய) ஆத்மஞான மார்க்கத்தால் அடையத்தக்கவளும், கமலம் போன்ற திருக்கண்களையுடையவளுமாகிய கௌரி அம்மையை யான் போற்றுகின்றேன்—(எ - று.)

இறைவனால் வியாபிக்கப்பட்டதாகலில் உலகம் ஓதப்ரோதம் எனப்படும். ஓதப்ரோதம் என்பது குறுக்கும் நெடுக்குமாகப் பரந்தது. அதாவது எப்பக்கத்திலும் பரந்துள்ளது; ஆடையில் பாவும் உண்டையுமாய் நூல் பரந்திருப்பது போல. சகம் முழுதிலும் இறைவன் உள்ளும் புறம்புமாய்க்கலந்து அந்தர்யாமியாய் வியாபித்தலின், சகம் இறைவனது வியாப்பியம் என்பது. அதனால் அஃது ஓதப்ரோதம் எனப்பட்டது. ஈசுரசத்தி சகத்துள் கலந்து நின்று காரியப்படுத்தும் என்பதனை,

"உலகெலா மாகிவேறா யுடனுமா யொளியா யோங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனா யிவற்றின் றன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீ ரமல னாகி நின்றனன் னீங்கா தென்றும்"

(சிவ—சித்தியார்)

எனவும்,

"இருநிலனாய்த் தீயாகி விசும்புமாகி இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே"

"நிற்பனவு நடப்பனவு நிலனு நீரு நெருப்பினொடு காற்றாகி நெடுவானாகி
அற்பமொடு பெருமையுமா யருமை யாகி யன்புடையார்க் கெளிமையதா யளக்க லாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானு மியானு மாகிநின்ற தன்மையினை நன்மை யோடும்
பொற்புடைய பேசக்கடவோம் பேயர் பேசுவன பேசுதுமோ பிழையற் றோமே."

(திருநா-தேவா-தாண்ட)

எனவும்,

"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே"

(திருவாசகம்)

எனவும்,

"ஒன்று நீ யல்லை யன்றியொன் றில்லை
யாருனை யறியகிற் பாரே" (திருவாசகம்)

எனவும்,

"பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே" (தாயுமானவர்)

எனவும் வருவன வற்றாலறியலாம்.

(த - சே.)

5. சராவசர வுலகனைத்துங் கலந்துவியா பகமாகித் தன்னில் யாவுஞ்
சரமருவு ணியினிரை யெனவிளங்கத் தானகத்துச் சார்வாய் நிற்பாள்
வரமருவு பாத்தியல்தேர் ஆன்மஞான மார்க்கமதா லடையத் தக்காள்
இருவரிய விழிகமல மானுமம்மை கௌரியையா னிறைஞ்சு கேனே.

प्रत्याहारध्यानसमाधिस्थितिभाजां
नित्यं चित्ते निर्वृतिकाष्ठां कलयन्तीम् ।
सत्यज्ञानानन्दमयीं तां तनुमध्यां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ६ ॥

ப்ரத்யாஹாரத்யாநஸமாதிஸ்திதிபாஜாம்
நித்யம் சித்தே நிர்வ்ருதிகாஷ்டாம் கலயந்தீம் ।
ஸத்யஜ்ஞாநாநந்தமயீம் தாம் தநுமத்யாம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥

(இ - ள்.) இந்திரியங்களைப் புலன்வழிச் செல்லவிடாது அடக்கி மனத்தை ஓரிடத்தில் நிறுத்திச் சமாதிநிலையில் இருக்

கும் யோகியர்களுக்கு நித்தமும் அவர்மனத்தில் சுகோதயத்தை (சுகநிலையை) உண்டு பண்ணுபவளும், சச்சிதானந்த ரூபமான வளும், சிறிய இடையினளும், கமலம் போன்ற திருக்கண்களை யுடையவளும் ஆகிய கௌரி அம்மையை யான் ஏத்துகின்றேன். (எ - று.)

निर्वृति என்பது சுகம், काष्ठा என்பது நிலை.

புலன்களை யடக்கி மனத்தை யொருவழிப்படுத்திப் பரப் பொருளில் நாட்டிச் சிந்தனை யற்றிருத்தலே சும்மா இருத்தல் என்பது. அதுவே சுகநிலை என்பது; இதனை,

"சும்மா இருக்கச் சுகஞ் சுகமென்று சுருதியெல்லாம்"

என்றற் றொடக்கத்துப் பட்டினத்தடிகள் வாக்காலும்,

"சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே"

என்றும்,

"ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அனுபூ திபிறந் ததுவே"

என்றும்,

"விரும்புங் குமரனை மெய்யன்பி னன்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே"

என்றும்,

"பாதார விந்த மரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே"

என்றும்,

"இராப்பக லற்ற இடத்தே யிருக்கை யெளிதல்லவே"

என்றும் வரும் அருணகிரிநாதர் திருவாக்கானும்,

"உணர்ந்தார்க் கென்றுந்—தேனவன்காண்"

என்றும்,

"கருதுவாரிதய கமலத்துறுந்—தேனவன்காண்"

என்றும் வரும் அப்பர்சுவாமிகள் திருவாக்கானுமறியலாம்.

(த - சே.)

6. புலங்கழிர்து பொறியடங்கப் பொருளொன்றின் மனமிருத்திச் சமாதி புக்கோர்
துலங்ககத்திற் சின்மயமாஞ் சுகோதயஞ்சேர் வித்தருளுந் தூயை யென்றும்
மலங்கதுவாச் சத்தொடுசித் தானந்த மயவடிவி சிறுநகைப்பாள்
இலங்குவிழி கமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சுகேனே.

चन्द्रापीडानन्दितमन्दस्मितवक्त्रां
चन्द्रापीडालंकृतनीलालकभाराम् ।
इन्द्रोपेन्द्राद्यर्चितपादाम्बुजयुग्मां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ७ ॥

𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌪𑍀𑌡𑌾𑌨𑌂𑌦𑌿𑌤𑌮𑌂𑌦𑌸𑍍𑌮𑌿𑌤𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌂
𑌚𑌂𑌦𑍍𑌰𑌾𑌪𑍀𑌡𑌾𑌲𑌂𑌕𑍃𑌤𑌨𑍀𑌲𑌾𑌲𑌕𑌭𑌾𑌰𑌾𑌮𑍍 ।
𑌇𑌂𑌦𑍍𑌰𑍋𑌪𑍇𑌂𑌦𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌰𑍍𑌚𑌿𑌤𑌪𑌾𑌦𑌾𑌂𑌬𑍁𑌜𑌯𑍁𑌗𑍍𑌮𑌾𑌂
𑌗𑍌𑌰𑍀𑌮𑌂𑌬𑌾𑌮𑌂𑌬𑍁𑌰𑍁𑌹𑌾𑌕𑍍𑌷𑍀𑌮𑌹𑌮𑍀𑌡𑍇 ॥ எ

(இ - ள்.) சந்திர சேகரராகிய பரமசிவன் கண்டு களிப்படைவதாகிய புன்னகை பூத்த முகத்தினளும், பிறை யணியினால் அலங்கரிக்கப்பட்ட நீலநிறம் பொருந்திய அளக பாரத்தை யுடையவளும், இந்திரன் உபேந்திரன் (விஷ்ணு) முதலிய தேவர்களால் அருச்சிக்கப்பட்ட இரண்டு திருப்பாத கமலங்களை யுடையவளும் கமலம்போன்ற திருக்கண்களை யுடையவளும் ஆகிய கௌரி அம்மையை யான் ஏத்துகின்றேன். (எ - று.)

(த - சே.)

7. நிலவுமிழு மதிமுடித்தோ னேயமுற முகிழ்த்தகுறு நகைமுகத்தாள்
நிலவுபிறை முடியணியா நிமிரளக பாரநிரை பரிக்குந் தேவி

வலவயிரி முரவயிரி யாதியர்கள் வழுத்துமிணை மலர்ப்ப தத்தாள்
இலகுவிழிகமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சுகேனே.

आदिक्षान्तामक्षरमूर्त्या विलसन्तीं
भूते भूते भूतकदम्बप्रसवित्रीम् ।
शब्दब्रह्मानन्दमयीं तां तडिदाभां
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ८ ॥

𑌆𑌦𑌿𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌾𑌮𑌕𑍍𑌷𑌰𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌲𑌸𑌨𑍍𑌤𑍀𑌂
𑌭𑍂𑌤𑍇 𑌭𑍂𑌤𑍇 𑌭𑍂𑌤𑌕𑌦𑌮𑍍𑌬𑌪𑍍𑌰𑌸𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌮𑍍 ।
𑌶𑌬𑍍𑌦𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑍀𑌂 𑌤𑌾𑌂 𑌤𑌡𑌿𑌦𑌾𑌭𑌾𑌂
𑌗𑍌𑌰𑍀𑌮𑌮𑍍𑌬𑌾𑌮𑌮𑍍𑌬𑍁𑌰𑍁𑌹𑌾𑌕𑍍𑌷𑍀𑌮𑌹𑌮𑍀𑌡𑍇 ॥ அ

(இ - ள்.) அகரமுதல் க்ஷகர மீறாகிய 51 அக்ஷர ரூபமானவளும், என்றும் அழிவற்ற திருமேனி கொண்டு விளங்குபவளும், பஞ்சபூத புவனங்கடோறும் உயிர்க்கூட்டங்களைப் பிறப்பிப்பவளும், சத்தப் பிரமமாகிய ஆனந்த வடிவினளும், மின்னொளிபோன்ற காந்தியுடையவளும், கமலம் போன்ற திருக்கண்களை யுடையவளும் ஆகிய கௌரி அம்மையை யான் ஏத்துகின்றேன். (எ - று.)

வடமொழியில் உயிர் 16-உம் மெய் 35-உம் ஆக 51 அக்ஷரங்கள் உண்டு. முதல் எழுத்து அ என்பது, ஈற்றில் உள்ளது க்ஷ என்பது. பராசத்தி இவ்வைம்பத்தோரக்ஷர வடிவமானவள் என்றபடி,

"அகரம தாதியான வெழுத்தெலா மாகி"

எனக் கந்தபுராணத்தில் வருவதும் நோக்குக. பராசத்தி நாதரூபமாய்ச் சத்தப் பிரபஞ்சத்திற்கு இறைவியாவள் என்றறிக.

(த - சே.)

8. சொலுமகரம் க்ஷகரமுதல் முடிவெழுத்தா யழிவிலதாய்த் துலங்கு
மெய்யாள்
நிலமுதலாம் பூதபுவ னத்துநாநா வுயிர்க்கூட்ட நிகழத் தந்தாள்
நிலவுமொலிப் பிரமமதா மானந்த மயிமின்னை நிகர்தே சுற்ருள்
இலகுவிழிகமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சுகேனே.

यस्याः कुक्षौ लीनमखण्डं जगदण्डं
भूयो भूयः प्रादुरभूदुत्थितमेव ।
पत्या सार्धं राजतशैले विहरन्तीं
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ ९. ॥

யஸ்யா꞉ குக்ஷௌ லீநமகண்டம் ஜகதண்டம்
பூயோ பூய꞉ ப்ராதுரபூதுத்திதமேவ ।
பத்யா ஸார்தம் ராஜதசைலே விஹரந்தீம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ ௯

(இ - ள்.) எவளுடைய வயிற்றுள் அகில உலக அண்டங்களும் அடங்கி யிருந்து மீண்டும் மீண்டுந் தோன்றி எழுகின்றனவோ அத்தகையினளும், பதியாகிய பரமசிவனோடு வெள்ளியங்கைலை மலையில் விளையாடுபவளும், கமலம்போன்ற திருக்கண்களையுடையவளுமாகிய கௌரி அம்மையை யான் போற்றுகின்றேன். (எ - று.)

(த -சே.)

9. அலகிலுல கண்டமவை யனைத்துமெவள் வயிற்றடங்கி மேலு
மேலும்
விலகலின்றி வெளிவந்து விரிந்திடுமத் தகையவருள் மேவு மன்னை
குலவுபெரு நேயமுறு கொழுநனுடன் வெள்ளிமலை குலாவுந் தேவி
இலகுவிழி கமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சுகேனே.

निल्यः शुद्धो निष्कल एको जगदीशः
साक्षी यस्याः सर्गविधौ संहरणे च ।
विश्वत्राणक्रीडनलोलां शिवपत्नीं
गौरीमम्बामम्बुरुहाक्षीमहमीडे ॥ १० ॥

நித்ய: ஶுத்தோ நிஷ்கல ஏகோ ஜகதீஶ:
ஸாக்ஷீ யஸ்யா: ஸர்கவிதௌ ஸம்ஹரணே ச ।
விஶ்வத்ராணக்ரீடனலோலாம் ஶிவபத்னீம்
கௌரீமம்பாமம்புருஹாக்ஷீமஹமீடே ॥ ௰

(இ - ள்.) நித்தியனும் நின்மலனும் நிட்களனும் ஏகனுமாகிய உலக முதல்வன் (சிவம்) சாட்சியாயிருப்பத் தானே படைத்தல் அழித்தல்களைச் செய்பவளும், உலகத்தைக் காத்தலாகிய விளையாட்டில் பெருவிருப்புடையவளும், சிவபத்நியும், கமலம் போன்ற திருக்கண்களையுடையவளுமாகிய கௌரி அம்மையை யான் போற்றுகின்றேன். (எ - று.)

இறைவன் இயல்பாகவே பாசத்தடையில்லாதவன், உற்பத்தி நாசம் இன்றி என்றும் உள்ளவன், குணங்குறி இல்லாதவன், தனக்கொரு முதலின்றித் தானே முதல்வனாயிருப்பவன், உலகெலா முணர்ந்து ஓதற்கு அரியவன், அலகில் சோதியனாகி விளங்குபவன். இவ்வாறு அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் ஒன்றினுந் தோய்வின்றித் தானே சுயம்பிரகாசமாய் நிற்குந் தன்னுண்மை நிலையில் சிவம் எனப்படுவன். இதுவே,

"அறிவுக்கறிவாகி அவ்வறிவுக்கெட்டா நெறியிற் செறிந்த நிலை"

என்பது. இதனை,

"ஊறிலான் குணங்குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரி லானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சார்வி லான்வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலா னுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்" (கந்த-புரா)

என்றும்,

"நாதமு நாதாந்த முடிவு நவைதீர்ந்த
போதமுங் காணுத போதமாய்—ஆதிநடு
அந்தங் கடந்த நித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த
குறியுங் குணமுமொரு கோலமுமற் றெங்குஞ்
செறியும் பரம சிவமாய்—அறிவுக்
கநாதியாய் ஐந்தொழிற்கு மப்புறமா யன்றே
மநாதிகளுக் கெட்டா வடிவாய்த்—தனுதருளின்
பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்குந்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளாய்—எஞ்சாத
பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வுங்
காரணமு மில்லாக் கதியாகி" (கந்தர்—கலிவெ.)

என்றும் வருஞ் சைவப்பெரியோர் வாக்கானும் அறியலாம். இப்படிச் சுத்தசிவமாக நிற்கும் இறைவன் உயிர்களிடத்துக் கொண்ட தன்னின் வேருகாத கருணை திருவுருவாக, உலகெலா மாகியும் உலகைத் தொழிற்படுத்தியும் உயிர்களின் வழி நிற்குந் தன்மையில், சத்தி எனப்படுவன். இறைவன் தன் ஆணையாகிய சக்தியால் உலகை ஐந்தொழிற்படுத்தி நிற்கு நிலையில் பசுபதி எனப்படுவன். இங்ஙனம் தன்னின் வேருகாத தன்னருட் சத்தியாகிய பராசத்தியானவள் உலக கிருத்தியங்களை நடத்தத் தான் அவற்றில் சார்ந்துஞ் சாராமலும் ஸாக்ஷிமாத்திரையாய் நிற்பன் என்பதை,

"உலகெலா மாகி வேரு யுடனுமா யொளியா யோங்கி
அலகிலா உயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனுய் இவற்றின் தன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீர் அமலனுகி நின்றனன் நீங்கா தெங்கும்"

எனவும்,

"சத்தியுஞ் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியுமாகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை எல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார்"

எனவும்,

"அருளது சத்தி யாகும் அரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவம் இல்லை அந்தச் சிவமின்றிச் சத்தி இல்லை
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட் (கு)
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்"

(சிவ—சித்தி.)

எனவும்,

"நீடு பரா சத்திநிகழ் இச்சா ஞான
நிறைகிரியை தரவதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு உருவ மாகி
நவின்றுபல கலைநாத விந்து வாதி
கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொள் தனுகரண புவன போகம்
பீடுபெற நிறுவியவை யொடுக்கு மேனி
பிறங்கியநிட் களசகளப் பெற்றி யாமே"

(சிவப்பிரகாசம்)

எனவும் வரும் சைவசித்தாந்த சாத்திரச் செய்யுட்களானும் அறியலாம்.

(த - சே.)

10. மலரகிதன் நித்தியன்நிட் களனேக ஞருமிறை வயங்கச் சான்ருய்ப்
பலவுலகும் படைத்தருளித் துடைத்திடுமெப் பரந்தானே பரிக்கும் சத்தி
நலமுலவச் சகம்பரிபா லிக்குமாடல் நயப்புமிக்கா ளரன்றன் பன்னி
இலகுவிழி கமலமலர் மானுமம்மை கௌரியையா னிறைஞ்சுகேனே.

प्रातः काले भावविशुद्धिं विदधानो
भक्त्या नित्यं जल्पति गौरीदशकं यः ।
वाचां सिद्धिं संपदमुच्चैः शिवभक्तिं
तस्यावश्यं पर्वतपुत्री विदधाति ॥ ११ ॥

𑌪𑍍𑌰𑌾𑌤𑌃 𑌕𑌾𑌲𑍇 𑌭𑌾𑌵𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌦𑌧𑌾𑌨𑍋
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌜𑌲𑍍𑌪𑌤𑌿 𑌗𑍌𑌰𑍀𑌦𑌶𑌕𑌂 𑌯𑌃 ।

வாசாம் ஸித்திம் ஸம்பதாமக்ர்யம் சிவபக்திம்
தஸ்யாவச்யம் பர்வதபுத்ரீ விததாதி ॥ ௰௧

(இ - ள்.) வைகறையில் சித்த சுத்தியோடு எவர் பத்தியாய் நாடோறும் இக்கௌரீதசகத்தை ஓதுகின்றரோ அவருக்கு வாக்குச் சித்தியையும் மேலாகிய செல்வத்தையும் சிவபத்தியையும் பார்வதி அம்மை தவறாது அருளுவாள். (எ - று.)

நூற் பயன்.

வேறு.

(த - சே.)

11. நித்தமுங் காலைப் போதில் நேயமார் நெஞ்சுஞ் சித்த
சுத்தியுங் கொண்டு கௌரிப் பத்திது சொல்வோர் வாக்குச்
சித்தியும் மேலாஞ் செல்வ வாழ்க்கையுஞ் சிவத்தி லாழ்ந்த
பத்தியும் பெறுவர் அன்னை பார்வதி யருளான் மாதோ.

கௌரீ தசகம்

என்னும்

கௌரிப் பத்து

முற்றிற்று.

தேவி துணை.

श्रीराजराजेश्वर्यै नमः

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அஷ்டகம்

अम्बा शाम्भवि चन्द्रमौलिरबलाऽपर्णा उमा पार्वती
काली हैमवती शिवा त्रिणयना कात्यायनी भैरवी ।
सावित्री नवयौवना शुभकरी साम्राज्यलक्ष्मीप्रदा
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ १ ॥

𑌅𑌂𑌬𑌾 𑌶𑌾𑌂𑌭𑌵𑌿 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍌𑌲𑌿𑌰𑌬𑌲𑌾𑌽𑌪𑌰𑍍𑌣𑌾 𑌉𑌮𑌾 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀
𑌕𑌾𑌲𑍀 𑌹𑍈𑌮𑌵𑌤𑍀 𑌶𑌿𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌣𑌯𑌨𑌾 𑌕𑌾𑌤𑍍𑌯𑌾𑌯𑌨𑍀 𑌭𑍈𑌰𑌵𑍀 ।
𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀 𑌨𑌵𑌯𑍌𑌵𑌨𑌾 𑌶𑍁𑌭𑌕𑌰𑍀 𑌸𑌾𑌂𑌰𑌾𑌜𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌪𑍍𑌰𑌦𑌾
𑌚𑌿𑌦𑍍𑌰𑍂𑌪𑍀 𑌪𑌰𑌦𑍇𑌵𑌤𑌾 𑌭𑌗𑌵𑌤𑍀 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌜𑌰𑌾𑌜𑍇𑌶𑍍𑌵𑌰𑍀 ॥ ௧ ॥

(இ - ள்.) அம்பா (அன்னை), சாம்பவி (சம்பு பத்நி, சம்பு=சிவன்), சந்த்ர மௌளி (பிறைமுடியினள்), அபலா (மெல்லியல்), அபர்ணு (சருகுதானும் புசியாது நோற்றவள்), உமா (உமை, தவத்திற்குச் செல்லவேண்டா எனத்தாயினல் தடுக்கப்பட்டவள்), பார்வதீ (மலைமகள்), காளீ (கரு, நீல, நிறமுடையவள்), ஹைமவதீ (இமவான் மகள்), சிவா (சிவனுக்கு மனைவி,) த்ரிணயநா (முக்கண்ணுடையவள்), காத்யாயநீ (காத்யபன முனிவருச்கு மகள்), பைரவீ (பைரவன் மனைவி), சாவித்ரீ (உலகை யீன்றவள், சூரியனைப் பிரகாசிப்பிக்கிறவள்), நவயௌவநா (என்றும் மாருஇளமையாள்), சுபகரீ (சுபஞ் செய்பவள்), சாம் ராஜ்யலக்ஷ்மீப்ரதா (பாக்கிய லட்சுமியைக் கொடுப்பவள்), சித்ரூபீ (ஞானவடிவி), பரதேவதா (மேலாகிய தெய்வம்), பகவதீ (பகவனுக்கு மனைவி, பூசிக்கத்தக்கவள்), ஸ்ரீ ராஜராஜேஸ்வரி. (எ - று.)

अम्बा मोहिनि देवता त्रिभुवनी आनन्दसन्दायिनी
वाणी पल्लवपाणि वेणुमुरलीगानप्रियालोलिनी ।
कल्याणी उडुराजबिम्बवदना धूम्राक्षसंहारिणी
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ २ ॥

அம்பா மோஹினி தேவதா த்ரிபுவனீ ஆனந்தஸந்தாயினீ
வாணீ பல்லவபாணி வேணுமுரலீகானப்ரியாலோலினீ ।
கல்யாணீ உடுராஜபிம்பவதநா தூம்ராக்ஷஸம்ஹாரிணீ
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேச்வரீ ॥ ௨ ॥

(இ - ள்.) அம்பா மோஹினீ (மயல் செய்பவள்), தேவதா (பிரகாசமுடையவள்), த்ரிபுவநீ (முச்சக முதல்வி), ஆநந்தசந்தாயிநீ (ஆனந்தம் அருள்பவள்), வாணீ (வாக்குரூபமானவள்), பல்லவபாணி வேணுமுரலீகானப்ரியா லோலினீ (தளிர்க்கரத்தில் பிடித்த வேய்ங்குழலது கானத்திற்கொண்ட விருப்பத்தால் எழுச்சியுடையவள்), கல்யாணீ (மங்கள வடிவமானவள்), உடுராஜ பிம்பவதனு (சந்திரனை ஒத்தமுகம் உடையவள்), தூம்ராக்ஷஸம்ஹாரிணீ (தூம்ராக்ஷன்=புகைக்கண்ணன், அவனைச் சங்கரித்தவள்,)......(எ - று.)

अम्बा नूपुररत्नकंकणधरी केयूरहारावली
जातीचम्पकवैजयन्तिलहरी ग्रैवेयवैराजता ।
वीणावेणुविनोदमण्डितकरा वीरासनासंस्थिता
चिद्रूपी परदेवता भगवती श्रीराजरजेश्वरी ॥ ३ ॥

அம்பா நூபுரரத்நகங்கணதரீ கேயூரஹாராவலீ
ஜாதீசம்பகவைஜயந்திலஹரீ க்ரைவேயவைராஜதா ।
வீணாவேணுவிநோதமண்டிதகரா வீராஸநாஸம்ஸ்திதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேச்வரீ ॥ ௩ ॥

(இ - ள்.) அம்பா, நூபுர ரத்ந கங்கண தரீ (பாதச் சிலம்பு, இரத்தின வளையல் என்பன தரிப்பவள்), கேயூர ஹாராவளீ ஜாதீசம்பக வைஜயந்திலஹரீ க்ரைவேயவைராஜதா (தோளணியும், முத்தாரங்களும், சாதிமலர் சண்பமலர்களாலாகிய கழுத்தணி மாலையினசைவும், கழுத்துப்பட்டையும் என்னும் இவற்ருல் மிகப்பிரகாசிப்பவள்), வீணுவேணு விநோத மண்டிதகரா (வீணையும் வேய்ங்குழலும் விநோதமாக ஏந்தப் பெற்ற கரங்களை யுடையவள்), வீராசனுசம்ஸ்திதா (வீராசனமாக நன்கு இருப்பவள்,)......(எ - று.)

अम्बा रौद्रिणि भद्रकालि बगला ज्वालामुखी वैष्णवी
ब्रह्माणी त्रिपुरान्तकी सुरनुता देदीप्यमानोज्ज्वला ।
चामुण्डाऽश्रितरक्षपोषजननी दाक्षायणी वल्लवी
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ ४ ॥

𑌅𑌮𑍍𑌬𑌾 𑌰𑍌𑌦𑍍𑌰𑌿𑌣𑌿 𑌭𑌦𑍍𑌰𑌕𑌾𑌲𑌿 𑌬𑌗𑌲𑌾 𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌮𑍁𑌖𑍀 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍀
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍀 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑍀 𑌸𑍁𑌰𑌨𑍁𑌤𑌾 𑌦𑍇𑌦𑍀𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌾 ।
𑌚𑌾𑌮𑍁𑌣𑍍𑌡𑌾𑌽𑌶𑍍𑌰𑌿𑌤𑌰𑌕𑍍𑌷𑌪𑍋𑌷𑌜𑌨𑌨𑍀 𑌦𑌾𑌕𑍍𑌷𑌾𑌯𑌣𑍀 𑌵𑌲𑍍𑌲𑌵𑍀
𑌚𑌿𑌦𑍍𑌰𑍂𑌪𑍀 𑌪𑌰𑌦𑍇𑌵𑌤𑌾 𑌭𑌗𑌵𑌤𑍀 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌜𑌰𑌾𑌜𑍇𑌶𑍍𑌵𑌰𑍀 ॥ ௪ ॥

(இ - ள்.) அம்பா, ரௌத்ரிணி (உருத்திரன் மனைவி), பத்ரகாளி (சுபஞ்செய்கிறவள், நீலநிறமுடையவளுமாம்) வகளா (வகலை=துட்டர்கள் நாவை யறுப்பவள்), ஜ்வாலாமுகீ (சுவாலை ரூபமான நாவையுடையவள்), வைஷ்ணவீ (விஷ்ணுவின் சத்திரூபமானவள்), ப்ரம்மாணீ (பிரமாவின் சத்திரூபமானவள்), த்ரிபுராந்தகீ (திரிபுராந்தகன்=சிவன், அவன்மனைவி), சுரநுதா (தேவர்களாற் போற்றப்படுபவள்), தேதீப்யமாநோச்ச்வலா (தகதக வென்றெறிக்குங் காந்தியுடையவள்), சாமுண்டா (சண்டன் முண்டன் என்னும் இருதானவரை ஜயித்தவள்), ஆச்ரிதரக்ஷ போஷ ஜநநீ (அண்டினவரைக் காப்பாற்றி வளர்க்குந்தாய்), தாக்ஷாயணீ (தக்கன் மகள்), வல்லவீ (கோபிகை ரூபமுடையவள்.) (எ - று.)

अम्बा शूलधनुःकुशाङ्कुशधरी अर्धेन्दुबिम्बाधरी
वाराही मधुकैटभप्रशमनी वाणीरमासेविता ।
मल्लाद्यासुरमूकदैत्यदमनी माहेश्वरी अम्बिका
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ ५ ॥

அம்பா ஶூலதநு:குஶாங்குஶதரீ அர்தேந்துபிம்பாதரீ
வாராஹீ மதுகைடபப்ரஶமநீ வாணீரமாஸேவிதா ।
மல்லாத்யாஸுரமூகதைத்யதமநீ மாஹேஶ்வரீ அம்பிகா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேஶ்வரீ ॥ ௫ ॥

(இ - ள்.) அம்பா, சூலதநு:குசாங்குசதரீ (சூலம், வில், பாசம், அங்குசம் என்பவற்றைத் தரிப்பவள்), அர்த்தேந்து பிம்பாதரீ (பாதிச்சந்திரனைத் தரிப்பவள்), வாராஹீ (வராகாவதார விஷ்ணுவின் சத்தி ரூபமானவள்), மதுகைடபப்ரசமநீ (மது, கைடபன் என்னும் அசுரர்களை அடக்கினவள்), வாணீ ரமாசேவிதா (சரசுவதி, இலக்குமி இருவராலும் சேவிக்கப்படு பவள்), மல்லாத்யாசுரமூகதைத்யதமநீ (மல்லாசுரன் முதலிய வரை, மூகாசுரனை அழித்தவள்), மாஹேச்வரீ (மகேசுவரன் மனைவி), அம்பிகா (மாதா.) (எ - று.)

अम्बा सृष्टिविनाशपालनकरी आर्या विसंशोभिता
गायत्री प्रणवाक्षरामृतरसःपूर्णाऽनुसन्धीकृता ।
ओंकारी विनतासुतार्चितपदा उद्दण्डदैत्यापहा
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ ६ ॥

அம்பா ஸ்ருஷ்டிவிநாஶபாலநகரீ ஆர்யா விஸம்ஶோபிதா
காயத்ரீ ப்ரணவாக்ஷராம்ருதரஸ:பூர்ணாऽநுஸந்தீக்ருதா ।
ஓங்காரீ விநதாஸுதார்சிதபதா உத்தண்டதைத்யாபஹா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேஶ்வரீ ॥ ௬ ॥

(இ - ள்.) அம்பா, சிருஷ்டி விநாச பாலன கரீ (படைத்தல், அழித்தல், காத்தல் களைச்செய்பவள்), ஆர்யா (சிரேஷ்டமானவள், மேலானவள்), விசம் சோபிதா (மிகநன்கு பிரகாசிப்பவள்), காயத்ரீ (காயத்ரிமந்திர ரூபமானவள்), ப்ரணவாக்ஷராம்ருதரசப்பூர்ணா (பிரணவாக்ஷரமாகிய அமுதசார மயமானவள்), அநுசந்தீக்ருதா (விடாது தியானிக்கப்படுபவள்), ஓங்காரீ (ஓங்கார ரூபமானவள்), விநதா சுதார்ச்சித பதா (வினதை புத்திரனால் அருச்சிக்கப்பட்ட திருவடிகளை யுடையவள்), உத்தண்ட தைத்யாபஹா (கொடிய அசுரரைச் சங்கரிப்பவள்.) (எ - று.)

अम्बा शाश्वति आगमादिविनुता आर्या महादेवता
या ब्रह्मादिपिपीलिकान्तजननी या वै जगन्मोहिनी ।
या पञ्चप्रणवादिरेफजननी या चित्कला मालिनी
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ ७ ॥

அம்பா ஶாஶ்வதி ஆகமாதிவிநுதா ஆர்யா மஹாதேவதா
யா ப்ரஹ்மாதிபிபீலிகாந்தஜநநீ யா வை ஜகந்மோஹிநீ ।
யா பஞ்சப்ரணவாதிரேபஜநநீ யா சித்கலா மாலிநீ
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேஶ்வரீ ॥ ௭ ॥

(இ - ள்.) அம்பா, சாஸ்வதீ (நிலைபேறுடையவள், என்று முள்ளவள்), ஆகமாதி விநுதா (ஆகமம் வேதம் என்பவற்றால் விசேஷமாகத் துதிக்கப்படுபவள்), ஆர்யா (சிரேஷ்டமானவள்), மஹாதேவதா (மேலாகிய தெய்வம்), யா பிரம்மாதி பிபீலிகாந்த ஜநநீ (எவள் பிரமாமுதல் எறும்பீறாகவுள்ள சகல ஜீவ வர்க்கங்களையும் ஈன்றவளோ அவள்), யா வை ஜகன் மோஹிநீ (எவள் உயிர்களை உலகவாழ்வில் மய்ல் கொளச் செய்பவளோ அவள்), யா பஞ்சப் ப்ரணவாதிரேபஜநநீ (எவள் பஞ்சவிதரூபமான பிரணவம் முதலிய மந்திரங்களை அருளிச்

செய்பவளோ அவள்), யா சித்கலா (எவள் உயிர்களிடத்தில் அறிவுக்கறிவாய் விளங்குபவளோ அவள்), மாலினீ (மாலை யணிந்தவள், சிரமாலையணிந்தவள்.) (எ - று.)

अम्बा पालितभक्तराज रनिशं अम्बाष्टकं यः पठेत्
अम्बालोककटाक्षवीक्षललितं ऐश्वर्यमव्याहतम् ।
अम्बापावनमन्त्रराजपठनादन्तीशमोक्षप्रदा
चिद्रूपी परदेवता भगवती श्रीराजराजेश्वरी ॥ ८ ॥

அம்பா பாலிதபக்தராஜ ரநிஶம் அம்பாஷ்டகம் ய꞉ படேத்
அம்பாலோககடாக்ஷவீக்ஷலலிதம் ஐஶ்வர்யமவ்யாஹதம் ।
அம்பா பாவநமந்த்ரராஜபடநாதந்தீஶமோக்ஷப்ரதா
சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீராஜராஜேஶ்வரீ ॥ அ ॥

(இ - ள்.) சிறந்த பத்தியோடு எவரொருவர் அம்பாஷ்டகத்தை இடைவிடாது படிக்கின்றனரோ அவர் அம்மையினது கடைக்கண்பார்வை பதியப்பெறுவர்; தடைப்படாத செல்வ வாழ்க்கையையும் பெறுவர்; அம்மையினது பரிசுத்தமாகிய சிறந்த இந்த மந்திரத்துதியைப் படிப்பதால் ஈற்றில் சிவசாமீப்பிய பதவியைக் கொடுத்தருள்வள் ஸ்ரீராஜராஜேஸ்வரி தேவி. (எ - று.)

ஸ்ரீராஜராஜேஸ்வரி அஷ்டகம்

முற்றிற்று.

தேவி துணை.

224737
Q25:417
N39

அரும் பத அகராதி

அகண்டம் - பிரிக்கப்படாதது, முழு,

அக்கதை / அட்சதை - மங்கல அரிசி, முழு அரிசி

அங்கதம் - தோளில் அணியப்படுவது, வாகுவலயம்

அங்குலியம் - மோதிரம்

அஞ்சம் - அன்னம்

அஞ்சனம் - மை

அபரஞ்சி - ஓடவைத்த பொன்

அமலம் - குற்றமில்லாதது, சுத்தம்

அரதனம் - இரத்தினம்

அரம்பையர் - தெய்வப்பெண்கள்

அருக்கியம் - பால், அறுகு முதலிய கலந்த உபசாரத்திரவியம்

அல்லி - அகவிதழ்

அளி - வண்டு

ஆசமனியம் - ஆசமனம் பண்ணும் நீர்

ஆரம் - முத்து மாலை

ஆனனி - முகத்தி. ஆனனம் முகம்

இமசலம் - குளிர்ந்தசலம், பனிநீர்

உடுபதி - சந்திரன்

உபநிடதம் - வேதாந்தம், வேதத்தினுட் பொருள்

உற்பலம் - கருங்குவளை, நீலோற்பலம்

எதம் - குற்றம்

எமம் - மகிழ்ச்சி, மதர்ப்பு

எலுமரி - (அரி எலும்) வரிபொருந்திய

ஓதனம் - சாதம், அன்னம், சோறு

கங்கணம் - கைவளை

கஞ்சம் - தாமரை

கண்டம் - துண்டு

கதவுதல் - பொருந்துதல்

கபோலம் - கன்னம்

கலித்தல் - மகிழ்தல்

கல்லகாரம் / கல்லாரம் - செங்கழுநீர்

கவரி - சாமரை

கவி - புலவன், அறிஞன்

கவிகை - குடை

கவின் - அழகு

களி - களிப்பு, மகிழ்வு

கறங்குதல் - ஒலித்தல்

கனங்குழல் - மேகம்போன்ற கரிய கூந்தல். கனம் = மேகம்

காஞ்சி - மகளிர் அரையில் அணியும் எண்கோவை மணி. மேகலை

குக்குலு - குங்கிலியம்

குழை - காதணி

கேதகி - தாழை

சசி - இந்திரன் மனைவி

சந்தம் - அழகு

சரம் - (1) இயங்குபொருள், (2) நூல், கயிறு,

சிலம்பு - பாதத்திலணியப்படுவது

சின்மயம் - ஞானசொரூபம்

சுத்தோதகம் - சுத்தசலம். உதகம் - சலம்

சுரும்பு - வண்டு
சூபம் - பருப்பு
தசாங்கம் - வாசனைத்தூபம் இடும் பொருள்
தபனன் - சூரியன்
தமனியம் - பொன்
தாளம் - முத்து
தனயன் - மகன்
தனயை - மகள்
தனு - உடம்பு
தாமம் - மாலை
தாம்பூலி - வெற்றிலை
திலகம் - பொட்டு
துகில் - ஆடை, உடை
தூநூல் - பரிசுத்தமான பூணூல்
தைத்தியர் - அசுரர்
தொடி - வளையல்
தொய்யில் - மகளிர் கன்னம் முதலிய வற்றில் எழுதும் கோலம்
நறை - மணம், தேன்
நிட்களன் - குணம் வடிவு இல்லாதவன்
நீராஞ்சனம் - கர்ப்பூரத் தட்டுச் சுழற்றல்
நுசுப்பு - இடை
பஞ்சகம் - ஐந்தின் கூட்டம்
பரம் - பாரம்
பரவரி - (பரவு+அரி) பரந்தவரி பொருந்திய
பாகு - (1) சருக்கரை (2) பாக்கு
பாத்தியம் -கால்கழுவக்கொடுக்கும் நீர்
புல்லல் - பொருந்துதல்
மகரந்தம் - பூந்தாது
மந்திரித்தல் - மந்திரம் செபித்தல்
மறை - வேதம்
மனு - மந்திரம்
மாமணி - மாணிக்கம்
மாலதி - சிறு சண்பகம்
மான்மதம் - கஸ்தூரி
முதம் - மகிழ்ச்சி
முரவயிரி - விஷ்ணு
மெய்ப்பாடு - உள்ளக்குறிப்பை வெளிப்படுத்தும் வகை
மௌவல் - முல்லை
லட்சியம் - இலக்கு, குறிக்கப்படும் பொருள்
வகுளம் - மகிழம்பூ
வரதை-வரங்கொடுப்பவள். வரதே- விளிச்சொல்
வலவயிரி - இந்திரன்
வன்னம் - வர்ணம், எழுத்து
வாடி / வாடிகை } - வேலி, வளைப்பு
வாமம் - அழகு
வாரிதி - கடல்
வால் - வெள்ளை
விமானம் - கோயில்
வெஞ்சனம் - கறிபதார்த்தம்
வைப்பு - உறைவிடம்.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.